REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 16 | சுன்னுகம்—பார்த்திப—மாசி ரு, 17-2-'46—ஞாயிறு | இதழ் 29

JAFFNA COLLEGE LIBRARY, FEB 18 1946, VADDUKODDAI, CEYLON.

# தூரத்து வெள்ளைத்துரை

## நாட்டில் எவரும் இல்லையா?

[கொழும்புநிருபர் கடிதம்]

உணவுப் பஞ்சம், புடவைக் கூப்பன்கள், க்ஷயரோக வைத்தியசாலைப் பிரச்சினை எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டது "ஸ்ரீ கனகரத்தினம் கணக்குப் பரிசோதனைப் பகுதித்தலைவர் பதவிக்குத் தகுதி இல்லையா?" என்ற கேள்வி. இங்கு இப்போது இருவர் ஓரிடத்திற் கூடியதும் இதைப்பற்றித்தான் சம்பாஷிக்கின்றனர்.

**அ**ரசாங்க சபை நேற்று முன்தினம் ஆரம்பமானதும் இது விஷயம் உச்சநிலையை அடைந்து விட்டது. அரசாங்கசபை எவ்வாறு விவாதித்துத் தீர்ப்புக் கூறுமென்பதை அறிதற்காக புதன்கிழமையன்று சபையின் கலரிகள் இடமின்றி நிரம்பி வழிந்து கொண்டிருந்தன. ஸ்ரீ. ஜீ. ஜீ. பொன்னம்பலம் விவாதத்திற் பங்குபற்றாமல் யாழ்ப்பாணம் சென்றுவிட்டார். ஆனால் ஸ்ரீமதி பொன்னம்பலம் வெகு 'அமரிக்கை'யாக விருந்து வாதப் பிரதிவாதங்களை அனுபவித்துக்கொண்டிருந்தார்.

'ஒடிட்டர் ஜெனரல்' பதவிக்குச் சீமையிலிருந்து ஒரு வெள்ளைத் 'தேவதை'யைத்தருவிப்பதாகச் சபையின் அனுமதியைக் கோரி தற்காலிக நிதிக்காரியதரிசி தீர்மானத்தைப் பிரேரித்தபின் விவாதம் காரசாரத்துடன் ஆரம்பமாயிற்று. இப் பதவிக்குச் சொந்த நாட்டுப் புதல்வன் ஒருவரை நியமனஞ் செய்தல் வேண்டுமெனவும் தற்போது கடமை பார்த்துவரும் ஸ்ரீமான்கள் கே. கனகரத்தினம், வீரசிங்ஹா போன்ற அனுபவசாலிகள் இலங்கையில் இருக்கையில் அந்நிய நாட்டிலிருந்து ஒருவரை இறக்குமதி செய்யவேண்டிய அவசியமில்லை யெனவும் கந்தவாலா சம்பவத்தை ஸ்ரீ. கனகரத்தினம் அம்பலப்படுத்தியதற்காக, நாடு அவருக்கு மிகவும் கடமைப்பட்டிருப்பதாகவும் ஸ்ரீ அமரிசூரியா தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தின் பல திறப்பட்ட நிர்வாகங்களின் பொறுப்புகளையும் இலங்கை மக்களே கையேற்று நடத்தவேண்டுமென்ற கொள்கை வலுப்பெற்று வரும்போது அனுபவம் வாய்ந்த ஒருவரைத் தகுதியில்லையெனக் கருதுதல் சுயாட்சியில் எந்த ரகத்தைச் சேர்ந்ததென விளங்கவில்லையே, என்று ஸ்ரீ தியாகராஜா கூறினர்.

தகுதிவாய்ந்த ஒருவரை நியமனஞ் செய்வதை எதிர்த்து ஒரு சிலர் சதியாலோசனை செய்துவருகின்றனர் எனவும் குறித்த உத்தியோகத்தரை நிரந்தரமாக்கினால் மேலான பதவி வகிப்போர் பாடு கஷ்டமாகிவிடுமெனவுங் கூறிய ஸ்ரீ தஹநாயகா ஸ்ரீ கனகரத்தினத்தைத் தனக்கு அதிகந் தெரியாத போதிலும் அவருடைய கணக்குப்பரிசோதனை அறிக்கைகளைப் படித்திருப்பதாகவுந் தெரிவித்தார். 'பகிரங்க சேவைப் பகுதியில் இன்று ஒளி வீசும் அணிகலம் ஸ்ரீ கனகரத்தினம் என்பது காலிப் பிரதிநிதியின் அபிப்பிராயம்.

"ஓநாயும் ஆட்டுக்குட்டியும்" என்றகதையை உதாரணங்காட்டி யாரோ ஒரு சந்தர்ப்பவாதி "ஐம்பதுக் கைம்பது" என்று கூக்குரலிட்ட பாவத்துக்காக பிறிதொருவரை வருத்துவது தர்மமாகாதெனச் சிறு பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்லிக் கொடுப்பது போல் ஸ்ரீ தஹநாயகா அரசியற் புலிகளுக்கிடையில் நின்று தர்மோபதேசஞ் செய்தார்!

**இ**லங்கை சுயாட்சிப் பாதையை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருக்கையில் மக்களின் மதிப்பைப் பெற்ற உத்தியோகத்தரின் சேவைகளைப் புறக்கணித்துவிட்டு அந்நியரில் நம்பிக்கை வைப்பதும் அடிமை வாழ்க்கையின் விளைவென்பது இங்குள்ள அநேகரின் அபிப்பிராயம். இலங்கைமக்கள் நிர்வாகப் பொறுப்பையேற்று 'அரசாங்க இயந்திரத்தை' இயக்குவதைத் தாம் விரும்பிய விடத்தும் சில பதவிகளை இலங்கைமக்கள் வகிக்கத் தகுதியற்றவர்கள் என்பது ஸ்ரீ சேனநாயகாவின் சித்தாந்தம்! ஸ்ரீ கனகரத்தினம் தலைமைப் பதவிக்குத் தகுந்தவரல்லவெனத் தான் கண்டிருப்பதாக விவசாய மந்திரி அழுத்தந் திருத்தமாகப் பேசினர். இருந்தும் இவருடைய பேச்சுக் கௌரவமான முறையில் அமைந்திருக்கவில்லை!

இந்த அழகில் சேர் ஒலிவர் குணத்திலகா இலங்கைமக்களைக் காப்பாற்றுவதற்காக லண்டனில் நிற்கின்றார். இவர் தமது உற்ற நண்பரை இந்தமாதிரி அந்தரப்பட விட்டு ஆகாயத்திற் பறந்ததே ஒரு சூழ்ச்சி! சேர் குணத்திலகா குடியேற்றநாட்டுக் காரியதரிசிக்கு ஸ்ரீ கனகரத்தினத்தை நிரந்தரமாக நியமனஞ் செய்யவேண்டுமென 'சிபார்சு' செய்யவில்லையென்ற சங்கதி இப்போது வெளியாகியிருக்கின்றது. கொழும்பு முழுவதிலும் இதே கதைதான். சேர் குணத்திலகா தனது விஷயத்தில் தர்மமாக நடந்திருக்கின்றார் என ஸ்ரீ கனகரத்தினம் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தார். ஆனல் அவர் சேர் ஒலிவரைநம்பி மோசம் போய்விட்டார்! சேர் குணத்திலகா தான் நன்மை செய்ய விரும்பியிருப்பார். ஆனல் மந்திரிசபை ஸ்ரீ கனகரத்தினத்தின் நியமனத்துக்கு ஆதரவளிக்கவில்லை.

சீமைசென்ற ஒருவர் குடியேற்ற நாட்டுக் காரியதரிசியின் காரியாலயத்துக்குச் சென்றதாகவும் அங்கு ஸ்ரீ கனகரத்தினம் என்பவரைப்பற்றி எவ்வித கடிதப் போக்கு வரத்தும் நடைபெறவில்லையெனவும் அறிந்தாரென இங்கு ஒரு வதந்தி நிலவுகின்றது.

# 'காசரோகஸ்தான்' ஆபத்து

## காங்கேசன்துறையில் தஹநாயகா 'தர்பார்'

'ஈழகேசரி' நிருபர்

**யு**த்தம் முடிந்ததும் ஒருவிதமாக ஓய்ந்திருந்த காங்கேசன்துறை 'வாடி' வீடு சமீபத்தில் இரு தினங்களாக அல்லோல கல்லோலப் பட்டது. இங்குள்ள இராணுவ வைத்திய சாலையைப் பொதுவைத்தியசாலையாக அமைக்கவேண்டும் என்பது பொதுஜன அபிப்பிராயம். இல்லைக் க்ஷயரோக ஆஸ்பத்திரியாக்க வேண்டுமென்பது சுயநலப்புலிகளதும் அவர்களைச் சார்ந்து உரிமைகளை அனுபவிப்போர்களினதும் விடாப்பிடி.

**ம**ந்திரிசபை, ஏற்கனவே குறித்த இராணுவ வைத்தியசாலையைக் க்ஷயரோக ஸ்தாபனமாக்குவதில்லையெனத் தீர்மானித்தது. ஆனல் 'பொதுரோகஸ்தான்' பிரியர்களும் 'க்ஷயரோகஸ்தான்' கும்பலும் ஜின்னுவையும் இந்து மகாசபையையும் பின்பற்றி நாட்டிற் பெரிய பிணக்கினைக் கிளப்பிவிட்டன. இருக்கின்ற தலையிடிகள் போதாதென்று 'இதுவுமா?' எனக்கூறி அரசாங்கம் இவ்விஷயத்தைப் பரிசீலனை செய்து ஒரு "விசாரணை" நடாத்தும்படி உபநிர்வாகசபை ஒன்றைக் காங்கேசன்துறைக்கு ஏற்றுமதி செய்தது. ஸ்ரீ தஹநாயகா, டொக்டர் கலீல், ஸ்ரீ நடேசன் என்போரைக் கொண்ட இச்சபை கடந்த 6-ம் 7-ம் தேதிகளில் விசாரணை நடத்தியது.

சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த பிரதம உத்தியோகஸ்தர்களும் பிரசன்னமாக விருந்தனர். யாழ்ப்பாணத்துப் பிரமுகர்களும் அறிஞரும் சமயஸ்தாபனங்களின் நிர்வாகிகளும் சாட்சியங் கொடுத்தனர். பொதுவாக இந்துக்கள் இது விஷயத்தில் அதிக அக்கறை எடுத்ததுமன்றிக் காங்கேசன்துறையில் க்ஷயரோக வைத்தியசாலை அமைப்பதாகில் இந்து மக்களின் முகங்களிலே அரசாங்கம் கரிபூசுவதாகுமென்றுங் கூறியதுடன், தர்மமான முறையில் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். ஸ்ரீ தஹநாயக்காவுக்கு இந்துக்களின் நிலை சரிபோற் தோன்றியிருப்பதாகத் தெரிகின்றது. டொக்டர் செல்லப்பா அவர்களுக்குக்கூட நாடி வீழ்ந்துவிட்டதாக அறிகின்றேன். சுபாவத்திற் சாந்த குணமுள்ள இந்துக்கள் இது விஷயத்திற் துடித்துப் பதைத்துச் சுறுசுறுப்பாக வேலை செய்வதைக்கண்ட மிஷனரிக் கூட்டம் கார்களையும் எடுத்துக்கொண்டு முகங்களைத் தூங்கப்போட்ட வண்ணம் திட்டமின்றிப் பின்வாங்கியதே மறக்க முடியாத ஒரு சம்பவமாகும்.

**கா**ந்தி வழியைப் பின்பற்றி அநேக இந்துக்கள் சாகும் வரை உண்ணுவிரதமனுட்டிக்கவும் தயார் என நியாயவாதி ஸ்ரீ எஸ். ஆர். கனகநாயகம் உறுதியாகக் கூறியபோது ஸ்ரீ தஹநாயகா சிறிது தயங்கிவிட்டார். இந்த மாதிரி உணர்ச்சியான ஓர் எதிர்ப்பு ஏற்படுமென்பதை அரசாங்கங் கருதவில்லை. இங்குள்ள சில அரசாங்க டொக்டர்மார் பொதுமக்களின் கண்களில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டுத் தங்கள் க்ஷயரோகத் தர்பாரை அமைதியாக நடத்தலாமென நினைத்துச் சகல ஒழுங்குகளையுஞ் செய்திருந்தார்கள். உதாரணமாக ஸ்ரீமதி ஏ. ஆர். சுப்பிரமணியம் அபிப்பிராயந் தெரிவிக்கும்போது

## மிஷனரிமாரின் ஒருமித்த எதிர்ப்பு

க்ஷயரோக வைத்தியசாலையே அமைக்கப்பட வேண்டுமென்பதாகக் கூறும்படி யாழ்ப்பாணத்து டொக்டர் எஸ். சி. துரைராசா தன்னைக் கேட்டுக்கொண்டதாகக் கூறினர். உண்மையைத் தைரியமாகக் கூறிய அம்மையாரை யாழ்ப்பாணம் பாராட்டவேண்டும்.

**டொக்டர் எஸ். சுப்பிரமணியம்** அவர்களும் தமதுகாக்கைக் கடைசி நேரத்தில் நடுக்கடலில் விட்டுவிட்டார். அவர் கூறியதாவது: "தற்போது காங்கேசன் துறையில் உள்ள க்ஷயரோக வைத்தியசாலையையும்கடற்கரைக் கருகில் வைத்திருப்பதைவிடுத்து உள்நாட்டில் வைப்பதே சாலச் சிறந்தது. கீரிமலை நீர் ஊற்றுக்குச் சமீபத்தில் உள்ள காரணம் பற்றி இராணுவ வைத்தியசாலையைக் க்ஷயரோக ஆஸபத்திரியாக்குவதை இந்துக்கள் எதிர்க்கின்றனர் எனவே, இக் கட்டடத்தை அரசாங்கம் பொது வைத்திய சாலையாக மாற்றுவதுதான் உகந்தது."

க்ஷயரோக வைத்தியசாலைக்கே இராணுவ ஆஸ்பத்திரியும் அதன் சுற்றாடலும் ஏற்றதெனப் பத்திரிகைகளிலெல்லாம் தமது கைவரிசையைக் காட்டிய "பி. எஸ்." விசாரணைச் சபையின்முன் தமது சொந்த அபிப்பிராயத்தைத் துணிவாகக் கூறிப் பொதுமக்களின் நம்பிக்கையைமீண்டும் பெறுவதற்குச் செய்த பிரயத்தனத்தை ஒருவரும் கண்ணியப் படுத்தவில்லை. ஏதோசிக்கலுக்குள்மாட்டிக்கொள்ளாது டொக்டர் அவர்கள் சுலபமாகத் தப்பிக்கொண்டதே போதுமானது!

**நியாயவாதி திரு. எஸ்.** இராசரத்தினம் (சைவவித்தியா விருத்திச்சங்கச் செயலாளர்) எதற்கும் மசியாத ஒரு பிரமுகர். தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கச் சென்ற இக் கல்வி நிபுணர் அரசாங்கத்தை எச்சரிக்கை செய்திருக்கின்றார். 'பொதுமக்களின் அபிப்பிராயத்தை அசட்டை செய்துவிட்டுக் குறித்த இடத்தில் க்ஷயரோக வைத்தியசாலை அமைப்பதாகில் அரசாங்கம் சங்கடத்துக்குள் மாட்டிக் கொண்டு திக்குமுக்குப்பட வேண்டிய பரிதாபநிலை ஏற்படும் ஜாக்கிரதை!'. என்று தைரியத்துடன் இரத்தினச் சுருக்கமாகத் தமது அழுத்தமான அபிப்பிராயத்தைக் கூறியுள்ளார்.

**சீமேந்துத் தொழிற்சாலை**யும் ஏற்பட்டுக் காங்கேசன்துறை ஒரு பிரதம துறைமுகப் பட்டினமாக மிளிரவிருப்பதால் இங்கு க்ஷயரோக வைத்தியசாலையை நிறுவுவது ஏற்றதல்லவென்றும் இது முற்கூறிய முற்போக்கான திட்டங்களுக்கும் இடறுகட்டையாக அமையுமெனவும் நியாயவாதி ஏ. சம்பந்தன் தமது அபிப்பிராயத்தைக் கச்சிதமாகவும் தூரதிருஷ்டியுடனுங் கூறினர். ஸ்ரீ தஹநாயகா இவரின் கூற்றுக்களை அவதானத்துடன் செவிசாய்த்துக் கொண்டிருந்தார்.

சிவபூசைக்குள் கரடிபை விட்டது போல நியாயதுரந்தரர் என். செல்வத்துரை கூறிய சாட்சியம் வெகு சுவாரஸ்யமாகவிருந்தது. யாழ்ப்பாணம் ஒரே ஆஸ்பத்திரிமயமாக விருப்பதால் மேலதிகமாகப் புதியதோர் பொது வைத்தியசாலை அவசியமில்லையெனக் குறிப்பிட்டார்! இது சம்பந்தமாக எவ்விதமான வகுப்புவாதச் சண்டப் பிரசண்டங்களுந் தலையெடுக்கவில்லை யெனவும் காங்கேசன்துறை ஒரு க்ஷயரோக பூமியாக மாறிவிடுவதை யாழ்ப்பாணம் விரும்பவில்லையெனவும் தெரிவித்தார்.

**இந்துக்களின் கௌரவ**த்தைக் காப்பாற்றுவது அரசாங்கத்தின் கடமையெனவும் புனித பூமியான காங்கேசன்துறையில் க்ஷயரோக வைத்தியசாலையை அமைப்பது பாதகமான செய்கையெனவும் நியாயதுரந்தரர் சாம். ஏ. சபாபதி அவர்கள் எடுத்துணர்த்தினர்கள். இதுபற்றியே அந்தக் காலத்தில் காலஞ்சென்ற சேர் ஏ. கனகசபை, சேர் பி. இராமநாதன் ஆகியோர் இத்தகைய வைத்தியசாலை யமைப்பதைமும்முரமாகஎதிர்த்தனர்என்பதை இங்குகுறிப்பிடுதல் அவசியம்.

நியாயதுரந்தரர் ரி. சி. இராசரத்தினம் காங்கேசன்துறை ராணுவ வைத்தியசாலையைக் காசரோக ஆஸ்பத்திரியாக மாற்றுவதைப் பற்றி எவ்வித ஆட்சேபம் இல்லையெனவும், ஆனல் இது சீமேந்துத் தொழிற்சாலைத் திட்டத்துக்குப் பங்கம் விளைக்கில் தான் அதை விரும்பவில்லையெனவும், கிண்ணத்திற் படாமலுங் கிடாரத்திற் தட்டாமலும் பேசித் தப்பிக் கொண்டார். இவர் மிஷனரி ஆஸ்பத்திரிகளின் நிர்வாகத்தில் பொறுப்பான பதவி வகிப்பதால் மிஷனரிமாருக்குப்பயந்து இப்படிக் 'கற்றுழை' அபிப்பிராயங் கூறியிருக்கின்றனர் என 'வாடி'வீட்டில் நின்ற பெரிய மனிதர் பேசிக்கொண்டனர்.

நியாயவாதி ஸ்ரீ பி. நாகலிங்கம் மாவிட்டபுரத்தைச் சுற்றியுள்ள பூமி இந்துக்களுக்குத் திவ்விய ஸ்தலமானதெனவும் நூற்றுக்கு 85 க்கு அதிகமான இலங்கை இந்துக்களின் அபிப்பிராயத்தை மதிப்பது அரசாங்கத்தின் கடமையெனவும் வலியுறுத்தினர்.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்குக் கிராமச் சங்கங்களின் தலைவர்கள் பொதுசன அபிப்பிராயத்தை மீறாது தங்கள் கருத்துக்களை எழுத்துமூலம் சமர்ப்பித்தனர்.

**சைவசித்தாந்தப் பேராசிரி**யர்ஸ்ரீ.எஸ். சிவபாதசுந்தரம் அவர்களும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் பிரதம குருக்களும் ஸ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்களும் இந்துக்களின் புண்ணிய பூமியில் காசரோக ஆஸ்பத்திரி நிறுவுவது தர்மமாகாதெனத் தத்துவரீதியிற் சாட்சியங் கூறினர்கள்.

பருத்தித்துறையிலிருந்து வந்த ஒரு சிறியகட்சி காங்கேசன்துறையிற் காசரோக வைத்தியசாலை அமைப்பது நல்லதெனத் தெரிவித்தது.

வண. டி. ரி. நைல்ஸ் உட்படச் சில கிறிஸ்தவர்கள் மிஷனரிகளின பிரதிநிதிகள் என்றமுறையில் இராணுவ ஆஸ்பத்திரியைத் தொற்றுநோய் வைத்தியசாலையாக மாற்றவேண்டுமென அபிப்பிராயங் கூறினர்கள்.

வேறு பல பிரமுகர்களும் சைவஸ்தாபனங்களின் பொறுப்பு வாய்ந்த தலைவர்களும் பொதுமக்களின் அபிப்பிராயத்தை எடுத்து விளக்கினர்.

இது சம்பந்தமான விசாரணை இப்போது கொழும்பில் ஆரம்பமாகி யிருக்கின்றது.

# சுப்பிறீங்கோட்டு விசாரணை

இவ்வருடத்து வடமாகாணச் சுப்றீங்கோட்டு வழக்கு விசாரணை சென்ற 4ல ஆரம்பமாயது.

விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்ட முதல் ஆறு வழக்குகளிலும், கொலைசெய்ய எத்தினித்ததாகக் குற்றச்சாட்டுகள் ஒவ்வொரு குறித்த எதிரிகள் மீதும் கொண்டு வரப்பட்டன. முதலாம், மூன்றும், நாலாம், ஐந்தாம் வழக்குகளில் எதிரிகள் யாவரும் குற்றவாளிகளாகக் காணப்பெற்று முறையே (1) கோண்டாவில் வே. கனகரத்தினம் என்பவருக்கு 2 வருடக் கடுங்காவலும், (3) தையிட்டி த. சின்னையா என்பவருக்கு, இளம் வயதினர் என்ற காரணம்பற்றி 500 ரூபா பணப்பிணையிலும், 500 ரூபா ஆட்பிணையிலும் ஒருவருடத்துக்கு நன்நடைத்தையும், (4) உடுவில் முத்தன் காசி என்பவருக்கு 4 வருடக் கடுங்காவலும் (5) அல்லாரை, இராமு கார்த்திகேசு என்பவருக்கு 5 வருடக் கடுங்காவலும்என நீதியரசர் தீர்ப்பளித்தார்.

இரண்டாவது வழக்கில் எதிரியான மண்டைதீவு, S. சோதிநாதன் என்பவர் சுற்றவாளியாகக் கண்டு விடுதலை செய்யப்பெற்ருர்.

ஆறுவது வழக்கு விசாரணை நடைபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ண பரம்பரை

• கொண்டோடி •

● விசாரணைச் சபையென்ருல் 'விருதா'ச்சபையாம்.

☼ பொதுஜனங்களை ஏமாற்றுவதற்காக இப்படியான ஒன்றை அனுப்பி வைப்பார்களாம் திறம் இராஜ தந்திரிகள்.

☼ இத்தந்திர வித்தையில் முதலாவது பரிசு எடுக்கக் கூடியவர்கள் ஏகாதிபத்திய வெறியர்களாம்.

☼ விடுதலை வெறிபிடித்த அடிமை இலங்கையர் பலர் அரசியற்றிருத்தம்வேண்டித் தவங் கிடந்தனராம்.

☼ சிலர் சன்னதங் கொண்டு சீமையும் நோக்கினராம்.

● இதன் விளைவாக வந்ததாம் 'ஸோல்பெரி' பிரசாதம்.

☼ இதனைப் புசித்தோர் பலராம்.

☼ புசிக்க மறுத்தோரும்வேறு சிலராம்;

☼ மறுத்தோருட் பின் புசிக்க எத்தனித்தோரும் ஒரு சிலராம்.

☼ உருசிபார்த்தவர் தத்தம் அபிப்பிராயங்களைத்தெரிவித்தனராம்.

☼ இவற்றைத் திரட்டிக் கொண்டு சென்றனராம் ஸோல்பெரிச் சகாக்கள்.

● இவர்களைத் தொடர்ந்தனவாம் சில காவடிகள்.

☼ விமானக்காவடி, தரிசனம் பெற்று சீக்கிரமாக வீடு திரும்பிற்றும்.

☼ கப்பற்காவடி ஆடி ஆடிச் சென்றதாம்.

☼ அதனுல் அது பூசைக்குப் பிந்திவிட்டதாம்.

☼ இக்காவடி தூக்கிஞேர் அங்கு ஆட்டங்களும் போட்டனராம்.

☼ ஆட்டங்களைப் பார்த்துப் பலர் தலைகளையும் ஆட்டினராம்.

☼ ஆனுல் இவர்களுக்குக் காவடி தூக்கியபலன் கிடைக்கவில்லையாம்.

● இதற்கிடையில் ஸோல்பெரி வெள்ளை அறிக்கை என்ற அரசியற் றிருத்தம் வந்து சேர்ந்ததாம்.

☼ இது ஒரு 'உயிரற்ற' சரக்காம்.

☼ ஒருவருக்கும் இதிலே திருப்தி ஏற்படவில்லையாம்.

☼ இவ்வளவாகுதல் கிடைத்ததே போதுமெனச் சிலர் இதனைக் கட்டித் தழுவினராம்.

☼ இதிற்கூடிய ஆத்திரமடைந்தோர் இந்தியர்களாம்.

● தங்களின் உரிமை பாதுகாக்கப் படவில்லையாம்.

☼ இதனுல் தங்களின் சொந்த உரிமைகளைக் கொண்டு கடைகளை மூடிவிட்டனராம்.

☼ மூடிவிட்டு இவர்கள் ஊரைப் பார்த்துப் போகவில்லையாம்.

☼ கொழும்பு, கண்டிப் பகுதிகளிலும் மற்றும் இடங்களிலும் இந்தியக் கடைகள் 'ஹர்த்தால்' அனுசரித்தனவாம்.

● ஒரு பேர்வழி மாத்திரம் இவர்களோடு ஒத்துழைக்க மறுத்து விட்டாராம்.

☼ இதனைத்தான் 'அசல்' வியாபார தந்திரம் என்னலாமாம்.

☼ பல இடங்களிலும் உள்ள இவரது கடைகளிற் பணம் நிரம்பி வழிந்து கொண்டிருந்ததாம்.

☼ அடுத்த கடைகளிலிருந்த கணக்கப்பிள்ளைகளுக்கு இதனுல் ஒரு 'கிராக்கி'.

● பொருட் தட்டுப்பாடு வரும் போதுதான் 'கிராக்கி' ஏற்படுகின்றதாம்.

☼ பேர் அம்பலப் புலவரொருவருக்கு விஷயத்தட்டுப்பாடு ஏற்பட்டதாம்.

☼ சில நாட்களாக இவர் வெறும் வாயைப் 'பொச்சடி'த்தாராம்.

☼ இப்பொழுது இரவல் எடுக்க இவர் புறப்பட்டு விட்டாராம்.

☼ இரவலிலும் தனி இன்பங் காண்பவர்கள் உண்டு.

☼ இரவற் புடவையிலே இது நல்ல கொய்சகம் என்று சொல்லிக்கொள்ள இடமளிக்க வேண்டுந்தானே.

● இடங்கொடுத்தால் மடம் பிடுங்குவார்களாம் சிலர்.

☼ இதனுல் தங்கள் நிலைமையையும் மறந்துவிடுகின்ருர்களாம்.

☼ தன் பல்லிலுள்ள அழுக்கை அகற்ற வழியறியாது மற்றவர்களின் பல்லிலுள்ள அழுக்கைக் களைய முற்படுகின்றனராம்.

● கீழ்ப் படியிலிருந்து தான் மேற் படிக்கு வந்தாராம் தற்காலிக 'ஓடிற்றர் ஜெனரல்' கனகரத்தினம்.

☼ இதனைக் கண்டுபிடித்தாராம் அரசாங்கசபைத் தலைவர் செனநாயகா.

☼ இவர் 'தம்'மில் எழும்பியிருக்கக்கூடுமாம் உயர்ந்த படிக்கு.

☼ எவ்வளவுக்கு மூச்சுப் பிடித்து நிற்பாரோ யார்கண்டது!


## 'confidential'

## BOOK NEWS

| | |
|---|---|
| A Text Book of Intermediate Physics by Moore | Rs. 16/80 |
| Modern World by Pakeman ... ... | Rs. 4/45 |
| The Struggle of Modern Man (An outline of modern History from 1450 to the present day) ... | Rs. 1/50 |
| Wild Ceylon by R. L. Spittel ... ... | Rs. 7/50 |
| A Miniature History of the War (down to the liberation of Paris) by C. K. Ensor ... | Rs. 3/— |
| Just Flesh by D. F. Karaka ... ... | Rs. 5/50 |
| This the India by D. F. Karaka ... | Rs. 6/90 |
| With 14-th Army by D. F. Karaka ... | Rs. 4/75 |
| Professional Conduct and Advocacy by Krishnaswami Aiyar ... | Rs. 7/50 |
| Letters of Rt. Hon. V. S. Srinivasa Sastri ... | Rs. 6/— |
| Folk-Dances of South India ... ... | Rs. 4/50 |
| World of Dreams ... ... ... | Rs. 6/50 |
| I. N. A. Defence by Bhulabhai J. Desai... | Rs. 1/50 |
| Sri Aurobindo Mandur Annual ... ... | Rs. 6/— |
| Numismatic Parallels of Kalidasa ... | Rs. 2/— |
| Keeping Fit (A health book for Senior Girls) | Rs. 2/25 |
| Elements of Needlework ... ... | Rs. 4/— |

**War Pictures by British Artists**

| | | | |
|---|---|---|---|
| War at Sea ... | Rs. 1/10 | Soldiers ... | Rs. 1/35 |
| Blitz ... ... | Rs. 1/10 | Air Raids ... | Rs. 1/35 |
| Women ... ... | Rs. 1/35 | Productions ... | Rs. 1/35 |

**S. S. Sanmuganathan & Sons**

PUBLISHERS & BOOK SELLERS

*VANNARPONNAI, :: :: JAFFNA.*



**புகையிலைப்பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்**

# புகையிலை

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிருர்கள்

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

# C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் — பெறமுடியும் —

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்

(பெரிய பிரித்தானியாவில் சழதாயமாக்கப்பட்டது)

(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

**COLOMBO COMMERCIAL CO., LTD.**

Incorporated in Great Britain.
Liability of Members Ltd.

[2620]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்காப்பியக் கடவுள்

★

**தமிழர் நாகரிகம் உலகில்** பழமையானது மட்டுமென்றி, பெருமையானதுங்கூட என அறிகிறோம். அந்தப் பழமையிலும் அவ்வளவு பெருமையடைந்த அந் நாகரிகத்தின் குறிக்கோள் யாது? அதனையறிந்தால் இன்றைய புதுமையினும், மிகச் சிறுமையடைந்துள்ள தமிழகத்திற்கும் உலகிற்கும் அது புத்துணர்வினையும், ஊக்கத்தினையும் அளிக்குமல்லவா?

மிகப் பழந்தமிழர் இயற்கையையன்றிக் கடவுளை நினையாததால் தான் அன்றைய உயர்வினையுற்றனர். இன்றைய இயற்கையை மறந்த கடவுட்கொள்கையே நமது சிறுமைக்குக் காரணம் என்பதெல்லாம் தொல்காப்பியத்தை ஆராயாத அல்லது மறுக்கும், உண்மை நோக்கில்லாதார் வெற்றுரையாகவே முடியும். இன்றையினும் அன்று இயற்கையில் பற்று மிகுதி என்பது மட்டில் உண்மை.

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய
வருமே"

என்ற தொல்காப்பியர், வாழ்க்கையின் இலக்கணம் கூறும் நூற்பாவில் 'கடவுள்' என்ற அழகிய சொல்லே வருகின்றது.

ஒரு மொழியினர் ஒரு சொல்லிற்குக் கூறும் பொருளினையும் அப்பொருளிற்கு வகுக்கும் இலக்கணத்தையும் வைத்தே அவர் தம் அறிவு, உயர்வு ஆயவற்றை அறுதியிட்டு விடலாம். அவ்வழியே, தாம் வணங்கும் ஒன்றனைக் குறிக்கும் சொல் 'கடந்து நிற்பது' என்ற பொருளுடையதாயும், அப்பொருள் கட்டற்றும், வண்மையுடையனவுமாய இலக்கணமுடைய பொருள்களின் தொடர்புடையதெனவுங் கூறுவதிலேயே அன்றைய நாகரிகவுள்ளம் விளக்கமாகின்றது.

இறைவனுக்குத் தமிழர் அமைத்த 'கடவுள்' என்ற உயர்ந்த பொதிந்த கருத்துடையதோர் சொற்போன்ற ஓர் சொல்லினை வேறு எம்மொழியிலுங் கடவுளைக் குறிக்கும் சொற்களுள் காண முடியாது எனத் தமிழர்தம் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் கூறுவதுண்டு. ஆம், மக்கள் செம்மையடைய வாழ்வின் குறிக்கோள் தானே கடவுள். அதனை எப்பொருளில் பற்றுகிறார்கள் என்பதில் தானே அவர்கள் முன்னேற்றம் அமைய முடியும். அம்முறையில் அன்று தமிழர் முந்தியே நின்றனர் எனலாம்.

இன்று உலக மக்களுள் எந்நாட்டினும், ஒருவர் மற்றவரைவிட உயர்ந்து (கடந்து) அதாவது வலிமை, அறிவு, செல்வம், இவற்றில் கடந்து நிற்க வேண்டுமென்று கருதாதார் யாவரேனும் உளரோ? அன்றும் இதே உள்ளத்துடன் கடந்த உயர்ந்த நிலையுறக் கண்ட நெறியைப் பற்றியதுதான் 'கடவுள்' (கட = கடந்து, உள் = உள்ளிருப்பது) கொள்கை. இந்த நோக்குடன் அந்நெறியினை ஆராயுங்கள். உண்மை காணலாம். உயர்வடையலாம்.

அந்நெறியில் துணையாகிக் கொள்கைக்கு உருவளிப்பது தான் கந்தழி, வள்ளி, கொடிநிலை ஆய மூன்றும். இன்று கடந்த மேம்பாட்டினையடைய நினைக்கும் அடிமை நாடுகளோ, அன்றி அந்நிலையினைக் காப்பாற்றிக் கொள்ள நினைக்கும் உரிமை நாடுகளோ வேண்டுவது 'சுதந்திரம்' தானே? அதாவது பிறர் ஆணையால் கட்டுப்படாத நிலை! இம் முறையினைத் தெளிய அறிந்த தமிழர் அன்று 'கந்தழி'யை வழிபட்டது (கந்து = கட்டு, அழி = அறுத்தது) வேறு எதற்கெனக் கூறலாம்?

மனிதர் மடியும்வரை அவர் தம் விருப்பமும் என்றும் மடிதலையன்றி மேலும் மேலும் வளர்ந்து (கடந்து) கொண்டே செல்கின்றது. அவ் வேட்கையினை முடிக்கக் கருதும் எவரும் அதனை மாறுமல் நினைதலும், அவ்வழி வாழ்வினை முயற்சியுற நடாத்தலுந்தானே இயற்கை. கடமையும், அந்நினைவும், முயற்சியும் (வழிபாடும்) சேர்ந்ததே

மு. கோவிந்தசாமி

தமிழர்தம் 'கடவுள்' கொள்கை, கந்தழி வழிபாடு எனக் கூறிவிடலாம்.

நன்று, அவ்வுயர்வினை (மற்றோரினுங் கடந்தநிலை) யடைவதற்கு முதலில் வேண்டுவதாகிய சுதந்திரத்தை(கட்டற்றநிலையை)ப் பெறுவதற்கோ அன்றிக் காத்துக் கொள்வதற்கோ மக்கள் செய்ய வேண்டுங் கடமைகள் யாவை? இன்று கடவுளைத் தம் உரிமையையளிப்பவராகவோ காப்பவராகவோ எண்ணி மக்கள் பெரிதும் வழிபடுகிறார்களன்றித் தம் 'கடமையை' வளர்ப்பவராகவும் அவரை எண்ணுகிறார்களில்லையே. அதனால் வந்த கேடன்றோ இன்று கடவுட் கொள்கையில் மாசும், வழிபாட்டில் இழுக்கும். அன்று தமிழர் கடவுளைத் தம் 'கடமை'யின் வடிவாகவுங் கண்டனர். அவை தாம் 'கொடிநிலை' 'வள்ளி' யென இரண்டும்.

இவற்றுள் கொடிநிலை ஞாயிற்றினையும், வள்ளி திங்களினையுங் குறிப்பதாகும். இவ்விரு போற்றலுடைய பொருள்களின் வல்லமையினை நாத்திகனும் ஒப்பித் தலை வணங்குவான். அன்று இயற்கை எழிலினை இறைவனுகக் கண்ட தமிழர் இவற்றைப் போற்றியதில் வியப்பென்ன? இவை யிரண்டும் மக்கள் உள்ளத்தை வணங்கச் செய்ததின் இயல்புதான் என்ன? அதுதான் வண்மை; வண்மை, என்றும், தன்னை முழுதும் உலகம் வாழ அளித்துவிடுங் 'கொடையே' அதுவாம். ஞாயிற்றின் ஒளியின்றி உலக உயிர்கள் வாழுமா? திங்கள் கடல்நீரை இழுத்துப் பாய்ச்சி வெம்மையைத் தணிக்காவிட்டால், பூமியின் அடியிலிருந்து எழுந்து கொண்டேயிருக்கும் வெம்மை உலகினை என்ன செய்யும்! இப்பெருதவிகளை விஞ்ஞானிகளும் இன்று கூறி வாழ்த்துகின்றனர்.

தண்மை கலந்த அருளும், வெம்மை கலந்த வீரமும் உலகினில் உரிமையை நாட்டி, உயர்வினை (கடந்தநிலை) யளிக்கின்றன. தண்ணிய அருள்வடிவாய பெண்ணும், வெய்ய வீரவுருவினைய ஆணும் சேர்ந்தே உலகாகத் திகழ்கின்றது. இக் காட்சியினை நிலையாக்கி என்றும் தம் வழி வரும் மக்களை இன்புறுத்துவது தண்மை; அருள்; பெண்மைத் பிழம்பாய திங்களினையும், வெம்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

# மகாத்மா தரிசனம்

## ஆசிரிய விருத்தம்

அன்பொடு அருளும் தாங்கி அறத்தினின் வடிவங் கொண்டு
மன்பதை யுலகோ ருய்ய மண்ணின்மே லுதித்தோன் தன்னை
என்பொடு உள்ளம் சேர என்னுயிர் களிப்புக் கொள்ளச்
சென்றுநான்காணப்பெற்றேன் செய்தவம் பெரிதும்பெற்றேன்.

காதினுற் கேட்டுக் கேட்டுக் காதல்மிக் கிருந்தேன் காணப்
போதவிழ் மலரில் வண்டு புறஞ்சுற்று மாறு போல
கோதிலாச் சாந்தச் செல்வன் குமரனைக் கண்டு நின்றேன்
எதினுல் எடுத்துச் சொல்வேன் எந்தையைக் கண்ட வாற்றை

வருகிறார் என்றார் சில்லோர் வாழ்த்தினர் பல்லோர் பல்லோர்
இருளினைச் சீக்குஞ் சோதி யெழுந்ததே யென்ன எம்மை
மருளினி லாழ்த்துஞ் செய்ய மாலைசேர் காலந் தன்னில்
ஒருதனி நடந்து வந்தான் உத்தமன் காந்திச் செல்வன்.

கைவிரல் கூப்பிக் கோட்டிக் காந்திக்கு ஜேயென் றேத்திப்
பைவரா யோசை செய்யும் பாரத மக்கள் தம்மை
உய்விக்க வந்த சாந்த உத்தமக் காந்திச் செல்வன்
கைவிரல் ஒன்று காட்டிக் காத்தனன் விந்தை தானே.

உச்சியி லிருந்து உள்ளங் கால்வரை நோக்கி நோக்கி
அச்சம தழியக் கண்டேன் ஆண்மைபெற் றேளிரக்கண்டேன்
சத்தியந் தன்னைக் கண்டேன் சாந்தத்தின் உருவம் கண்டேன்
இச்சகம் புகழு மெந்தை யியல்பினை யெல்லாங் கண்டேன்.

இன்னிசைப் பாட லில்லை யினிக்கவே பேசி மக்கள்
துன்னிடச் செய்ய வேறோர் துரைத்தனப் பேச்சு மில்லை
இன்னிசைப் பயனு•யேய்ந்த எம்மிறை தன்னை யேத்த
துன்னினர் மக்கள் என்றாற் சொல்லுவ தென்னே வேறு.

பொன்னிற மேனி கண்டேன் பொக்கைவாய்ச் சிரிப்புக்
[கண்டேன்
மின்னிடும் ஆடை தன்னில் மெய்ம்மையே விளங்கக்கண்டேன்
பொன்னிற மேனி தன்னிற் புனிதன்றன் வாழ்வு கண்டேன்
தன்னையே மறந்த தன்மை யுருவெலாங் கண்டேன் நானே.

**வித்துவான், க. ந இரத்தினவேல்**
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

# கன்னன் உயர்வு

பொ. பாலசிங்கம்

**தூது** சென்ற கிருஷ்ணரைத் துரியோதனன் தனது கொடிய வஞ்சனையினால் நிலவறையுள் வீழ்த்திவிட்டான். அவருக்குக் கோபம் வந்துவிட்டது; துரியோதனனை அப்படியே அழித்துவிட வேண்டுமென்று நினைத்தார். கோபம் பொங்கிவழிந்த அந்த நேரத்திலுங்கூடக் கிருஷ்ணரின் உள்ளத்திற் பஞ்சபாண்டவர்களுடைய எண்ணம் உதிக்கத்தான் செய்தது. பாண்டவர்களுடைய சபதம் நினைவுக்குவந்தது. அவரில் ஏற்பட்ட கோபம் தணிந்துவிட்டது. அப்பொழுதே துரியோதனனுடன் சமர்செய்து அவனைக் கொன்றுவிட்டால் பாண்டவர்களுடைய சபதத்துக்கே பங்கம் நேரிடும்; பாரதப்போர் நடக்கவேண்டிய அவசியமேயில்லை. நல்லவேளை! அவர் அடிகோலிய பாரதப் போருக்கே தடையேற்படா வண்ணம் தமது கோபத்தை மாற்றிக்கொண்டார்.

கிருஷ்ணர் துரியோதனனது மாளிகையை விட்டுப் புறப்பட்டார். அவருக்குத் துரியோதனன்மீது கோபம் இருக்கவேயிருந்தது. பாரதப் போரில் துரியோதனனைக் கெடுக்கும் சதியாலோசனைகளில் ஈடுபட்டது அவர்மனம். துரியோதனன் பக்கலில் நின்று போர் செய்யப்போகும் வீரர்களைப் பற்றி அவர் நினைத்தார். ஆம்; அவனையும் அவனுக்குத் துணையாக நிற்பவருட் சிறந்த வீரரையும் பிரித்து விடுதல்தான் சிறந்த வழி. எவ்விதப்பட்டேனும் துரியோதனன் பக்கலில் அவர்கள் போர் செய்யாமல் தடுக்கத்தான் வேண்டும்.

கன்னன் சிறந்த வீரன். அவனுடைய உதவியினாலேதான் துரியோதனன்கூடப் பாரதப் போருக்குத் துணிந்துநின்றான். அவனைத் துரியோதனனிடமிருந்தும் பிரித்துவிட்டால் இவன் கொட்டம் அடங்கிவிடும். கிருஷ்ணர் மனதில் இவ்வெண்ணம் தோன்றியது. தனது வலையை முதல் வீசினார் கன்னனிடம்: "பஞ்சபாண்டவர்கள் உன் தாயின்வயிற்றிற் பிறந்தவர்கள். அவர்களெல்லாரும் உனக்கிளையவர்கள் கன்னன் இடுக்குற்றான். ஆச்சரிய மேலீட்டினால், மேலும் அவர் கூறப்போவதைக் கேட்கிறான்: 'பெண்களுக்குள்ளேயே சிறந்தவளாகிய குந்திதேவியின் வயிற்றிற் சூரியனின் புதல்வனாய் அவதரித்தாய் நீ. தருமனை யமன் நல்கினன்; வீமனை வாயு வழங்கினன்; விஜயனை வாசவன் ஈந்தனன்; நகுலனையும் சகதேவனையும் தேவ மருத்துவர் அன்போடளித்தனர். இப்படியாக உங்கள் அறுவரையும் தனது மந்திரத்தின் வலிமையாற் குந்தி பயந்தாள். எல்லோருள்ளும் நீயே மூத்தவன். முடிசூடுவதற்குரிய தகுதி உன்னிலே இருக்கிறது. நீ உன் தம்பியருடன் சென்றிருத்தலே நலம்."

"கோபாலா! இன்றுதான் என் பிறப்பை யுணர்ந்தேன். ஆனல், என்றுமே என் பிறப்பை யுணராத — நான் யாரென்றே யறியாத துரியோதனன், என்னைத் தன்னுடன் சேர்த்து, என்னை அரசனாக முடிசூட்டி அதிக சிறப்பையும் செல்வத்தையுங் கொடுத்து என்னைப் பாதுகாத்தான். துரியோதனனுதியோர்க்கும், பாண்டவர்க்குமிடையில் யுத்தம் ஏற்படப் போகிறதென்பது இன்று உலகறிந்த காரியம். அப்படி, போர் நடக்கப்போகிறதென்றறிந்த பின்னும், நான் துரியோதனனை விட்டு என் தம்பியருடன் சேர்வேனாயின் "செய்ந்நன்றி மறந்தவன்" என்று உலகம் என்னைப் பழிப்பதற்கு இடங்கொடுத்தவனாகிறேனல்லவா?"

என்ன செய்வார் கிருஷ்ணர்! பாவம், கன்னன் கூறியவற்றில் உண்மை இருக்கவே இருக்கின்றது என்று நினைத்து மாறுத்தரம் கூற முடியாதவராய் அவ்விடம் விட்டகன்றார். என்னவிதப்பட்டும் கன்னன் மனதை மாற்றத்தான் வேண்டும் என்ற எண்ணம் அவர்மனதில் இல்லாமலில்லை.

குந்திதேவி கன்னனிடம் வருகின்றாள். எல்லாம் கிருஷ்ணரின் வேண்டுகோளின் படிதான். ஒருகாலமும் அவனிடம் வந்தறியாத அவளைக் கன்னன் வியப்புடன் உபசரித்து வரவேற்கிறான். அவள், "மகனே! இன்று நான் உனது தாய் — உன்னை யீன்றவள் என்று சொல்லிக் கொள்வதில் எவ்வளவு பெருமையடைகிறேன். அதற்காகவே இப்பொழுது இங்குவந்தேன். உன்னை நான் பெற்றும் மகனென முலையூட்டி வளர்க்கவோ மடியில் வைத்திருக்கவோ அவ்வளவு புண்ணியஞ் செய்தவளல்ல. நான், முன் ஒரு தவமுனிவந்து மந்திரமுபதேசிக்க அந்த மந்திரத்தின் வலிமையால் கதிரவனைச் சேர்ந்து உன்னைப் பெற்றேன். அப்பொழுது கன்னிப்பெண்ணா யிருந்தமையால் உலகின் தூற்றலுக்குப் பயந்து பாவியாகிய நான் உன்னைப் பேழையில் வைத்துக் கடலில் விட்டேன்." என்று கூறக்கேட்ட கன்னன் "இது கிருஷ்ணருடைய சூழ்ச்சியாய்த்தான் இருக்கவேண்டும்." என்று மனதுள் நினைத்து, அவள் தன் தாய் தானோவென்று தெளிவுறும் பொருட்டுத் தான் வைத்திருந்த போர்வையைக் கொண்டு வந்து, "முன்னும் அநேக பெண்கள் என்னைப்பெற்ற தாய் என்று வந்து இந்தப் போர்வையினால் அவர்களுரைத்த பொய் வெளியாகி அவர்களும் துன்புற்று என்புருவானார்கள்" என்று கூறிக்கொண்டே அதைப் போர்க்குமாறு அவளிடம்கொடுத்தான். அவளும் அதை வாங்கித் தன் உடலில் போர்த்து அதிக சோபையுடன் விளங்கினாள். தாய்க்குரிய அடையாளங்கள் தென்பட்டன. கன்னன் வியப்புற்றான். அநேக காலத்திற்குப் பிறகு பெற்றதாயைக் கண்ட அவன் மனநிலையைச் சொல்லவும் வேண்டுமா? குழந்தைபோலானான் கன்னன். தாயின் மடிமீது தவழ்ந்தான். குந்தியின் கண்கள் அளவிலா மகிழ்வுடன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன. அவனை அன்போடு இறுகத்தழுவி முத்தங்கொடுத்தாள். அவள் கூறுகிறாள்: "என்புதல்வனே! உன் தம்பியர் ஐவரும் வந்து உன் அடிவணங்கி, நீயிட்டவேலையை அவர்கள் செய்யவும் நீ ஒருகுடைக்கீழிருந்து அரசாளவும், சிற்றரசரெல்லோரும் வந்து உன்னை வணங்கவும் வீரமும் செல்வமும் பொலிந்து இருப்பதைவிட்டு இங்கு வசிப்பது உனக்கு அழகாகுமா? உன் தம்பியருடன் சேர்ந்து வாழ்வதே உனக்குப் பெருமையும் கீர்த்தியுமாகும்."

"தாயே! நீ என்னைப்பெற்றவளென்பது இன்று எனக்கு வெட்ட வெளிச்சமாகிவிட்டது. ஆயினும் அற்றைநாட்டொடங்கி இன்றளவும் என்னைத் தனது ஆருயிர்த் துணைவனெனக்கருதி எனக்கு முடிசூட்டி அரசும் தந்து. என்னுடன் கூடவே உணவருந்தி, தன்னுடன் பிறந்த சகோதரர்கூட என்னை வந்து வணங்கும்படியான சிறப்புப் பொருந்திய நிலையில் வைத்தவன் ஒருவன் இருக்கிறானல்லவா? அவனை நான் மறக்கலாமா? துரியோதனனுடைய மனைவியும் நானும் கவறுடிக் கொண்டிருந்தபோது கணவன் வருகையைக்கண்டுபோலும் அவள் எழ முயன்றாள். அவன் வருகையை யறியாத நான் அவளை இருத்துவதற்காக அவள் சீலையைப் பிடித்திழுத்தேன். அப்பொழுது அவளது முத்தாரங்களெல்லாம் அறுந்து சிதறுண்டன. அதைக்கண்ட நான் ஏங்கிப் போயிருந்தபோது துரியோதனன் வந்து, "மணிகளைப் பொறுக்கித்தர நீ நோக்கின்றனையா அல்லது நீ பொறுக்கித்தர நான் கோக்கட்டுமா?" என்ற அன்புநிறைந்த சொற்களால் எனது மயக்கத்தைக் கலையவைத்த அவனை நான் மறக்கலாமா? தாயே! இப்போது நான் துரியோதனனை விட்டுப் பாண்டியருடன் சேர்வேனாயின் நன்றிகெட்ட பாவியாவேன். அன்றியும் என்னை உலகம் தூற்றும். பாரதயுத்தம் மூளவிருக்கின்றது நான் துரியோதனனுக்கு மாறாகப் பாண்டவருடன் சேர்ந்து சண்டை செய்யலாமா? ஒருவர் வாழ்மனையிலுண்டு பின் அவருடன் போர் செய்ய நினைப்பது தருமமாகுமா? உண்ட வீட்டுக்கே கொள்ளி செருகுவது நீதியா தாயே? எதுவந்தாலும் சோற்றுக்கடன் பெரிதல்லவா. துரியோதனன் சோறுதந்து என்னை வளர்த்துவிட, எனக்கு ஒன்றுமே செய்யாத பாண்டவர்க்கு நான் பயனை அளிப்பதா? தாயே! நான் பாண்டவருடன் சேர்ந்து வாழ்வது பெருமையும் கீர்த்தியுமாகாது. ஆனற் போர்முனைக்குச்சென்று துரியோதனன் பக்கலிற் சமர்செய்து நான் அவனிடம் உண்ட சோற்றுக்கடனைக் கழிப்பதுதான் பெருமையும் கீர்த்தியுமாகும். அதுவே தருமமாகும்." என்றான் கன்னன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னுகம்: பார்த். மாசி ௲ சுஉ


## பயங்கரமான உணவுப் பஞ்சம்

**என்றுமில்லாத உணவுப்** பஞ்சம் இவ்வருட ஆரம்பத்துடன் தோற்றி உலகமக்களை வாட்ட ஆரம்பித்துளது. எல்லா நாடுகளிலும் உணவின்றி வருந்துபவர்கட்கு அளவில்லையாம். பத்திரிகைகளின் தலையங்கங்கள் இப்பஞ்சத்தையே குறிப்பிடுகின்றன. இப்பஞ்சத்தை எவ்வாறு ஒழிப்பதென வகையறியாது எல்லா நாட்டினரும்—சாதியினரும் பெருங் கவலையடைகின்றனர். எல்லா நாட்டினரும் இன்னலடையும்போது எவர் எவர்க்குத் துணை செய்யவியலும்? யுத்தத்தின் பேருக ஏற்பட்ட பலனே இப்பஞ்ச மென்போம். அரசியல் வாதிகள் பொருளாதார நிபுணர் என்போர் யாது செய்வதென அறியாது தடுமாறுகின்றனர்.

இந்த மாரி காலத்தில் ஐரோப்பிய நாடுகள் உணவின்றி யடையும் பெருந்துயர் எந்நாட்டிலும் இல்லையாகும். முன் கொடுக்கப்பட்டு வந்த உணவிற் பன்மடங்கு குறைத்தே இப்பொழுது வழங்கப்படுகின்றது. இங்கிலாந்தில் அரைவாசி குறைக்கப்பட்டதாம். இதுவரையும் போதிய உணவின்றிக் கஷ்டமடைந்த பொதுமக்கள், இவ்வித ஆபத்து நேர்ந்தவிடத்து எவ்வாறு உயிர் வாழ்வாரோ நாமறியோம். ஜெர்மனி தேசத்திலும் மற்றைய ஐரோப்பிய நாடுகளிலும் மக்கள பசிப்பிணியால்வாடி இறுதியடைந்துள்ளாராம். ஐக்கிய வல்லரசினரே (U. N. O.) இந்நிலையை நோக்கி ஏதாவது சாந்தியை நாட வேண்டும். உலகமக்களைப் பாதுகாத்துச் சமாதானத்தை நிறுவ முற்பட்ட இந்தச் சபையினரே இப்போதும் இவ் விஷயத்தையுங் கவனிக்க வேண்டும். அன்றேல், உலகநிலை மிகக் கொடிய பரிதாப கதியை நிச்சயமாக அடையு மென்பது திண்ணம்.

நமது அயல்நாடாகும் இந்தியாவின் பஞ்ச நிலையை நோக்க அதிக பயங்கரத்தை அடையவேண்டியதாகின்றது. பருவப்பெயர்ச்சிக் காற்ருல் வழக்கமாகப் பெய்யும்மழை, காலக் கொடுமையால் இல்லாது போயிற்று. எனவே தென்னிந்தியாவிலும் ஏனைய பாகங்களிலும் பொதுவாக நெல் விளைவு முற்ருகக் கிடையாதாயிற்று. அழிந்துபோன விளைநிலங்களை இராசப்பிரதிநிதி வேவல் பிரபு நேரே சென்று பார்த்து இதனை அறிந்துள்ளார். வங்காளத்திலும் மற்றைய மாகாணங்களிலும் இப்பொழுதே பஞ்சம் மறுபடி ஆரம்பிக்கின்றதாம். நெல் மாத்திரமன்றிக் கோதுமை முதலிய சிறுதானியங்களும் முற்ருக அழிந்தமையாற்ருன், பஞ்சம் மிக்க பயங்கர நிலையை அடையுமெனப் பலர் யோசிக்கின்றனர். 30 லட்சம் தொன் நிறையுள்ள சிறு தானியம் இவ் வருடம் குறைந்துள்ளதெனக் கணக்கிடப் படுகின்றது. இவ்வாருய நிலையில் இற்றைக்கு மூன்று வருடத்துக்குமுன் வங்காளத்தில ஏற்பட்டதிலும் பார்க்கக் கொடிய பஞ்சம் இந்தியாவை நோக்கி நிற்கின்ற தென்பது வெள்ளிடைமலை.

இலங்கையின்நிலையைப்பற்றி நாம் கூருதே பொதுமக்கள், அறியக்கூடியவராவர். அரசினர் கோதுமையின் அளவைக் குறைத்துவிட்டனர். அரிசியும் போதியளவு கிடைப்பது சந்தேகமாகின்றது. அன்ருடு விலைக்குப்பெற்று அன்றே யருந்தும் ஏழைமக்கள் நிலை மிகவும் பாதிக்கப்பட்டுளது. இலங்கை அடுத்த மாதத்துக்கல்ல அடுத்த வாரத்துக்கு அரிசி யாரிடம் பெறுவதென எவரும் அறியார். போதியளவு சிறு தானியங்களையும் பொதுமக்கள் காலக் கொடுமையால் உண்டாக்காது விட்டனர். கள்ளரிசியின் விலையிலிருந்து உணவுக்கஷ்டம் எவ்வளவான பயங்கர நிலையை அடைகின்றதென்பது பெறப்படும். நெல் விளைவிக்கப்படுங்காலத்தில் முன்னும் பின்னும் மழை பெய்யாது விட்டமையால் விளைவு முற்ருகக் கிடையாதெனக் கூறினும் பொய்யாகாது. இவ் வருடத்தைப் பொதுமக்கள் எப்படிக் கழிப்பதென்பதும் கூறவியலாத விஷயமாகும். இந்தியா, பர்மா முதலிய நாடுகளில் அரிசி, நெல் பெறுவ தென்பதெல்லாம் ஆதாரமில்லாத பேச்சே. மலாய்நாட்டில் உணவுப்பஞ்சம் உச்சநிலையை அடைந்துளதாம். அங்கே களவும் கொள்ளையும் தலைப்பட்டுப் பெரிய இடுக்கணைப் பொது மக்களுக்கு உண்டாக்குகின்றன.

இவ்வாருய நிலையில், இலங்கைப் பொதுமக்கள் ஒவ்வொருவரும் தத்தம் ஆற்றலையே நம்பவேண்டிய தாகின்றது. தமக்கு வேண்டிய உணவினைத் தாமாகவே பெறமுயலின்ன்றி இக்கஷ்டத்தினின்று தப்பிக்கொள்வதென்பது இயலாத காரியம். காலந் தாழ்க்காது உணவுற்பத்தி முயற்சிகளில் நம்மவர் ஈடுபடுவதே வேண்டப்படுவது. சிறுதானியங்கள் கிழங்குவகைகள் என்பனவற்றைப் பன்மடங்காக உற்பத்தி செய்வதில் யாவரும் முனைந்து உற்சாகத்துடன் தொண்டாற்றிச் செல்லின் ஒருவிதமாக இப்பஞ்சத்தைச் சமாளித்து விடலாம். பொது மக்கள் இன்னும் இப் பயங்கரமான கஷ்டநிலையை உள்ளபடி உணராதிருப்பதுவருத்தத்தைத் தருகின்றது. அரசினர் சிறிதுசிறிதாக, இப்பொழுது அளிக்கும் உணவினைக்குறைப்பாரென்பது நிச்சயம். எனவே நாம் சாவதானமாக இருந்து வேண்டிய பாதுகாப்புக்களை மேற்கொள்வதேஉசிதமாகும்.


### 205-ம் இலக்க புடவைக்கட்டுப்பாட்டு அறிவித்தல்

**களவுபோன புடவைக் கூப்பன் புஸ்தகங்கள்**

SE 288001 துவக்கம் SB 288015 வரையும் SB 288762 துவக்கம் SE 290000 வரையும் SE 716901 துவக்கம் SE 718000 வரையும் வரிசை இலக்கம் உள்ள (சீனியர்) பெரியவர்களுக்கான புடவைக் கூப்பன் புஸ்தகங்கள் கண்டிக் கோட்-த்தில் (கச்சேரி) இருந்தும் களவுபோய் விட்டன.

2. மேற்படி புஸ்தகங்களில் ஏதையாவது வைத்திருக்கும் எவர் மீதும் களவு சாமானை வைத்திருப்பதற்காக வழக்குத் தொடரப்படும் என பொது மக்கள் எச்சரிக்கப்படுகின்றனர்.

3. வியாபாரிகள் இப் புஸ்தகங்களி லிருந்து கூப்பன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டாமென்று கேட்கப்படுகின்ருர்கள். அப்படி யாரும் கொண்டுவந்தால் அவர்களைப் பொலிசாரிடம் ஒப்பித்துவிடவும்.

ஈ. ரெுட்றிக்கோ
புடவைக் கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு 11-2-46 [2644]

### அடைவு விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் சாவகச்சேரி கந்தர்-வல்லிபுரம் அவர்களின் கடையில் 2-3-40 தொடக்கம் 1-8-ச4 வரை No. A. 360 தொடக்கம் 9528 வரையும் No. B. 223 தொடக்கம் 8370 வரையும் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பிய நகைகள் மேற்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விற்பனவு 1946-ம் ஆண்டு பங்குனிமாதம் 6-ந் திகதி புதன் கிழமை காலை பத்துமணியின் மேல் எடுக்கப்பட்டநகைகள் பிற நீங்கலாக மிகுதி மேற்படியாரின் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

நா. வீரவாகு உடையார்
8-2-46 வெந்தீஸ் மேஸ்தர்


# பாதை ஓரத்தில்

★

## பாட்டைசாரி

**இலங்கைவாழ் இந்தியர்**கள் இலங்கை மக்களைப் பயமுறுத்திப் பார்த்தார்களா, இல்லையேல் ஏகாதிபத்திய பிரிட்டனை எச்சரிக்கை செய்து வைத்தார்களா என்பது இன்னுந் தெரியவில்லை. கடந்த செவ்வாய்க்கிழமை 'ஹர்த்தால்' என்ற அரசியல் ஆயுதத்தையும் உபயோகித்திருக்கின்றனர். இந்த, எதிர்ப்பு யார்மேல் என்பதை நாவலப்பிட்டியாவிற் கூடிய இலங்கை இந்தியர் காங்கிரசின் நிர்வாக சபைதானும் விளக்கமாகச் சொல்லிவைக்கவில்லை.

ஸோல்பெரி அரசியற்திட்டம் இங்குள்ள இந்தியர்களுக்கு எவ்வித சலுகைகளையும் உதவாதபடியால் கடைகளை மூடிவிட்டு வீடுகளிற் கௌரவமாகவிருந்த இலங்கை-இந்தியர்களையும், வேலைக்குப் போகாது காலை நீட்டிக்கொண்டிருந்த ஏனைய இந்தியத் தொழிலாளர்களையும் பாராட்டத்தான் வேண்டும். ஓய்வு ஒழிச்சல் இன்றி சதா'அடித்துக்கொடாமல்' இப்படி இடையிடையே சுகம் அனுபவிப்பதை யார்தான் மறுக்க முடியும்!

இலங்கை அரசாங்கத்துடன் இங்குள்ள இந்தியர்கள் மல்லுக்கட்டுவார்களாஞல் அவர்கள் தங்கள் கண்களைத் தங்கள் விரல்களாற் குத்திக்கொள்ளுகின்றனர் என்பதை உணரட்டும். ஏகாதிபத்திய பிரிட்டனின் வாலைப் பிடித்துக்கொண்டு இலங்கையைச் சுரண்டி இன்பம் அனுபவிக்க இவர்களுக்கு இன்னுமா எண்ணம்? ஜவஹரின் புத்திமதி இவர்களின் மூளைகளுக்குட் புகவேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்திப்போம்.

### கலைஞன் முகுல் டே

**பரதகண்டம் கலைச் செல்**வர்களின் புண்ணிய ஸ்தலம். காலத்துக்குக் காலம் எங்கள் தாய் நாடு இந்தியக் கலைஞரை உபசரித்து உணர்ச்சி பெறும் பாக்கியத்தைப் பெற்றுவருகின்றது. ஈழமணித் திருநாடு எனப் புகழ்ந்தேத்தப்படும் இலங்கையில் இப்போது கலைஞர் முகுல் டே தம்பதிகள் நிற்கின்றனர். இவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு உபசரணையின்போது ஸ்ரீ முகுல் டே, "கலைப் பண்பு நாட்டின் ஜீவநாடி யெனவும் இலங்கை அரசாங்கம் நல்ல ஊக்க மெடுத்துக் கலையை வளர்க்கவேண்டு மெனவும் உபதேசித்துள்ளார். ஆமாம்;

வெள்ளத்தின் பெருக்கைப்போற்
கலைப் பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும்
குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்

என்ற பாரதியாரின் உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டுமாஞல் அவர் கூறுவது போல் 'உள்ளத்தில் உண்மை யொளி உண்டாக' வேணடுமல்லவா?

### 'அண்ணமலை' பேசுகின்றது

**கலையுள்ளத்தின் அவசியத்**தைப் பற்றிப் பேசும்போது சமீபத்தில் ஈழகேசரியிற் தோன்றிய ஒரு இலக்கணக் கட்டுரை பற்றி அண்ணமலைப் பல்கலைக்கழகத்து அறிஞர் ஒருவர் எழுதியனுப்பியுள்ள கடிதத்தை இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை. அவர் எழுதுவதாவது:

**ஈழகேசரி—பிள்ளை நினைவு** இதழ் (11-3-45) எனக்கு இன்னும் இன்பத்தை யூட்டுகின்றது. தமிழ் வளர்த்த தாமோதரனுரை நினைந்து நினைந்து இறும்பூதெய்துகின்றேன். சமீபத்தில் அவருடைய 'சந்தி' பற்றி எழுந் [illegible] சூரிய நாராயண சாஸ்திரியார் அவர்கள் பாடிய சில அடிகள் உள்ளத்தில் உதித்தன. அவற்றை ஈண்டுத் தருகின்றேன்.

'காமோதி வண்டர்
கடிமலர்த்தேன் கூட்டுதல்போல்
நாமோது செந்தமிழின்
நன்னூல் பல தொகுத்த
தாமோ தரம்பிள்ளை
சார்பெடுத்துச் சாற்றளவர்
தாமோ தரமுடையார்
தண்டமிழ்ச் செங்காப்புலவீர்.''

......இவ்வாறு அந்த அறிஞர் எழுதிக்கொண்டே போகின்ருர்.

### இந்துக்கல்லூரி

**அண்ணமலைப் பல்கலைக்**கழகச் செய்தி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைப் பற்றியும் எழுதும்படி தூண்டுகின்றது. ஒரு காலம் இக்கல்லூரியின் அதிபராக விருந்து கல்லூரிக்குக் கௌரவத்தைத் தேடிவைத்த தென்னிந்திய அறிஞன் ஸ்ரீ சஞ்சீவ ராவ் இப்போது இலங்கையில் நிற்கின்ருர். இந்திய மாணவரின் அழைப்பையேற்று அவர்களின் வருடாந்த விழாவிற் தலைமை வகிக்கின்ருர். ஈழத்துப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலானந்தஜி முக்கிய பேச்சாளராகவிருப்பார்.

ஸ்ரீ சஞ்சீவி ராவ் காசியிலுள்ள 'குவீன்ஸ்' கல்லூரியின் கௌரவ அதிபர். கலைப்பண்பு நிறைந்தவர். நல்ல ஞானம் படைத்தவர். கல்வி விஷயங்களில் நல்ல பரிச்சியமுண்டு. இந்த அறிஞர் இம்மாதம் 23-ந் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவிற் தலைமை வகிக்கும் பாக்கியம் பெற்றிருக்கின்ருர். அவருடைய சொற்பெருக்கைக் கேட்க நாங்களும் பாக்கியம் பெற்ரேம்.

### கல்லாக வேண்டாம்!

**கலை,ஞானம், பண்பு என்**றெல்லாம் எழுதும்போது சமீபத்தில் வ.ரா. செய்துள்ள எச்சரிக்கை திகிலை விளைக்கின்றது. எழுத்தாளரைத் திரும்பிப் பார்க்க வேண்டாம் எனக் கேட்கின்ருர். பாரதக் கதையை நினைவூட்டி ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் திரும்பிப் பார்த்தவர்கள் கல்லாகி விட்டதையுங் குறிப்பிடுகின்ருர். அப்படியாஞல் 'மறுமலர்ச்சி, மறுமலர்ச்சி' எனப் பாடிக்கொண்டு திரிபவர்களிற் சிலர் தவருகத் திரும்பிப் பார்த்தாற் கருங்கல்லாக வேண்டியதுதாஞ? இந்த அழகில் அவர்களைக் கவிதை என்று சொல்லி விடுவதா? கல்லாகி விட்டால் நவீன சூர்ப்பனகை ஒருத்தி 'மாறுமலர்ச்சிக்கோலம்' பூண்டு அக் கருங்கல்லைக் காலால் உதைத்தாலும் அது உயிர் பெறுமா என்பது சந்தேகம்!! எனவே, 'மறுமலர்ச்சி' பேசுபவர்கள் சிலரில்—மறுமலர்ச்சியை ஆரம்பித்துவைத்த பாரதியார் கூறுவது போல,

''நலமொரெட்டுணை யுங்கண்டி
லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லு
வேன்''.

( 5-ம் கலத் தொடர்ச்சி )

களின் வேலை, சிரிக்க வைப்பது, ருசிகரமாக எழுதுவது, ஜனங்களை தப்பு வழியில் செலுத்துவது என்று சொல்லப்படுகிறது. இது உண்மையாஞல், பத்திரிகைகளின் விசேஷத்தனமே போய்விடும். பிரிட்டனில் சுதந்திரமாகப் பத்திரிகைகள் நடக்கின்றன. அதன் செய்திகளை நம்பலாமென்று நாம் நினைக்கிரேம். ஜாவாவுக்கு விசாரணைச்சபையை அனுப்பக்கூடாது என்று டச்சு அயல்நாட்டு மந்திரி கூறுவது, ஒன்றும் தெரியாமலிருக்கும் ஜாவா விஷயத்தை அப்படியே வைத்திருக்க வேண்டுமென்று சொல்லுவதுதான். ராஜதந்திர முறையில், உக்ரைன் பிரதிநிதிக்கு விஷயங்களை அறிவிப்பதாக டச்சு மந்திரி கூறுகிருர். ராஜதந்திரமுறை என்ன என்பது எங்களுக்குத் தெரியும்.......

உலக விவகாரம்

## ஜாவா நெருக்கடி

### ருஷியாவின் முழக்கம்

**ஜாவா தகராறைத்** தீர்க்க ஒரு சர்வதேச விசாரணைச் சபை ஜாவாவுக்கு அனுப்ப வேண்டுமென்று ஸ்ரீ. ஆன்ட்ருவ் வைஷின்ஸ்கி நேசபாதுகாப்புச் சபையிற் பேசினுர். அவர் கூறியதன் சாரம்.

நேசபாதுகாப்புச் சபை இப்போது ஒரு ஆபத்தான கஷ்டத்தில் இருக்கிறது. கீழ்க்கண்ட விஷயங்களை நாம் கவனிக்க வேண்டும்.

1. இந்தோனேசிய மக்கள் மீது யுத்தம் தொடுக்கப்பட்டிருக்கிறது. இது பெரும் ஆபத்தான விஷயம். ஏனென்ருல் இந்தோனேசியாவில் ஏற்பட்டிருக்கும் இத் தீப்பொறி, பெரும் தீக்கனலையே கிளப்பிவிடும்.

2. உண்மை நிலவரத்தை பாரபட்சமின்றி அறிய பிரிட்டன், ருஷியா, அமெரிக்கா சீனம் ஒல்லாந்து, ஆகிய நாடுகளைக்கொண்ட விசாரணைச்சபை அனுப்பவேண்டும்.

3. ஜாவாவுக்கு பிரிட்டன் சென்றிருக்கிறது. மற்ற நாடுகள் செல்ல உரிமை கிடையாது என்று சொன்ஞல் சர்வதேச ஒத்துழைப்பு என்றெல்லாம் பேசுவதற்கு அர்த்தமில்லை. நேச தேசங்கள் என்று சொல்லுவதையும் நிறுத்திவிட வேண்டும்.

4. ஜாவா விஷயத்தில் தலையிடுவது நேச நாடுகளைப் பொறுத்த விஷயம். தலையிடுவதை நாம் குறைக்க வேண்டுமென்ருலும், நேச சாஸனப்படி தலையிடுவது சரியானதுதான்.

5. ஜாவாவுக்குத் துருப்புகளை அனுப்புவதற்காக, ஹேகில் (ஒல்லாலந்து தலைநகரத்தில்) துருப்புகளுக்குப் பயிற்சிகொடுப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இதைப் பார்த்தால், இந்தோனேசியர்கள் மீது பெரும் அளவுக்கு யுத்தம் நடக்குமென்று தெரிகிறது. இது எதிர்கால சமாதானத்துக்கே ஆபத்தை விளைப்பதாகும்.

இந்தோனேசியாவில் இப்பொழுது யுத்தமே நடக்கிறது. அங்கு அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதாகக் கூறி, தனிப்பட்ட இனங்கள் மீது கொடூரமான அடக்கு முறைகள் பிரயோகிக்கப்படுகின்றன.

7. ஜப்பானியத் துருப்புகளை உபயோகித்து அங்கு தாக்கச் சொல்லுகிருர்கள். ஜப்பானுடன் நாம் செய்திருக்கும் சரணுகதி ஒப்பந்தத்தையே இது மீறுவதாகும்.

**இந்தோனேசிய சாதாரண** மக்களை அடக்குவதற்காக துருப்புகளைஉபயோகிப்பது, நேச சாஸனத்தின் கொள்கைக்கே விரோதமானதாகும். பிரிட்டிஷ் துருப்புகளைக்கொண்டு தாக்குவது ஏற்க முடியாத விவகாரமாகும். ஜாவா பற்றிவரும் செய்தி எல்லாம் பொய்யென்று டச்சு, பிரிட்டிஷ் பிரதிநிதிகள் சொல்லுகிருர்கள். ஆஞல், அங்கு விசாரணைச் சபையை அனுப்பக் கூடாது என்கிருர்கள். எதற்காக இப்படி சொல்லுகிருர்களென்பது தான் விளங்கவில்லை. நேசநாடுகள் சார்பாக, இந்தோனேசியாவில் தாங்கள் இருப்பதாகப் பிரிட்டிஷாரும் டச்சுக்காரர்களும் கூறுகிருர்கள். ஆஞல் வரும் செய்திகள் சரியல்லவென்று சொல்லுகிருர்கள். பத்திரிகைகளை நம்பாவிட்டால், வேறெங்கிருந்து மற்ற நாடுகளுக்குச் செய்திவரும் என்பதுதான் தெரியவில்லை. இதற்கு ஒரேஒரு வழிதானுண்டு. அதாவது நேச விசாரணைச் சபையை அனுப்புவது. இதைக் கூடாது என்று சொல்லுகிருர்கள்..

### பேவினின் போக்கு

இது தவறென ஸ்ரீ பெவின் கூறுகின்ருர். இவ்வாறு சொல்லுவதே தப்பு. பத்திரிகைகளை அவமதிப்பதாகும். "பத்திரிகை

(தொடர்ச்சி 4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா

# நாடார்ஜி ராஜிநாமா

# தமிழ்நாட்டில் 'சதிக்கும்பல்'

—காந்திஜி

சட்டசபைத் தேர்தல்களில் ஈடுபட்டும், காந்திஜியின் தமிழ் நாட்டு விஜயத்திற் குதூகலித்துக் கொண்டுமிருந்த தமிழ்நாட்டுக்குச் சமீபத்தில் வெளிவந்த **ஹரிஜன்** பத்திரிகையின் முதல் இதழ் பெரிய மனக் குழப்பத்தையும் திகிலையும் உண்டாக்கியிருக்கின்றது. இதிற் காந்திஜி கையெழுத்திட்டுத் தீட்டியிருக்கும் கட்டுரை தினசரிகள் அனைத்திலும் பிரசுரமாகியிருக்கின்றது. இக்கட்டுரையில் மகாத்மா இராஜாஜி பற்றியும் தமிழ்நாடு காங்கிரஸைக் குறித்தும் கூறியிருக்கும் வாசகம் அரசியல் உலகையே திடுக்கிடச் செய்கின்றது. "இராஜாஜிக்கு எதிராக ஒரு "சதிகாரக்கும்பல்' (Clique) இருப்பது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கின்றது. இக்கும்பல் சென்னைக் காங்கிரஸுக்குள்ளேதான் இருக்கின்றது. ஆனால் பொதுமக்களிடம் இராஜாஜிக்கு நல்ல செல்வாக்கு உண்டு. இப்போது காங்கிரஸின் பொறுப்பைத் தாங்கும் வல்லமை படைத்தவர் இராஜாஜியே. அவருடைய சேவைகளைத் தமிழ்நாட்டுமக்கள் இழந்து போகக் கூடாதென நான் எச்சரிக்கை செய்கின்றேன்...." எனக்காந்திஜியின் ஹரிஜன் கட்டுரையிற் கண்டிருக்கின்றது.

இதைப்படித்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. கே. காமராஜ நாடார் தலைமைப்பதவியிலிருந்து விலகிக்கொண்டார். "ராஜிநாமா செய்வதைத் தவிர நான் செய்யத்தக்கது பிறிதொன்றுமில்லையென்றே கருதுகிறேன்." என நாடார்ஜி தாம் விடுத்திருக்கும் அறிக்கையிற் கூறுகின்றார்.

**காந்திஜி** சென்னையில் தங்கியிருந்த நாட்களில் தமிழ்நாடு காங்கிரஸ் விவகாரங்களைக் குறித்து யாதொன்றும் தம்முடன் பேசவில்லையென ஸ்ரீ. காமராஜ் வருத்தத்துடன் தெரிவிப்பது மிகவும் பரிதாபமான விஷயம். 'சதிகாரக்கும்பல்' என்ற சொற்பிரயோகம் உள்ளத்தைச் சுக்கு நூறுக்குந் தகைமையது.

ராஜிநாமாச் செய்துள்ள தமிழ்நாட்டுத் தலைவரைப் பின்பற்றி அவருடைய சகாக்களும் வெளியேற யோசித்தவிடத்தும் தேர்தலுக்கு இன்னுஞ் சொற்ப நாட்களே யிருப்பதால் அதற்கேற்ற வேலைகளுக்குப் பாதகம் ஏற்படுமெனக் கருதி அவர்கள் அவ்வாறு செய்யாது விடுத்தனர். சந்தர்ப்பத்தை அவதானித்து ஆராய்வோடு சேவை செய்யும் ஏனைய அங்கத்தவரின் நியாயமான போக்கை நேர்மையான உலகம் ஆதரிக்குமென்பதில் ஐயமில்லை.

கடந்த இருபதுவருட காலமாக நாடார்ஜி மகாத்மாவைத் தமது தலைவராக ஏற்று அவரைப் பின்பற்றியுள்ளார். காந்திஜியின் மனவருத்தத்துக்குத் தான் காரணமாக விருத்தல் தவறெனநினைத்து ஸ்ரீ. காமராஜ் கௌரவத்துடன் விலகிக்கொண்டார். ஆனால் அங்கத்தவனாகவிருந்து எவ்வித குந்தகமும் விளைக்காது காங்கிரஸுடன் உழைக்கச் சித்தங் கொண்டுள்ளார்.

புத்தர்பெருமானின் அவதாரமெனப் போற்றப்படும் கண்கண்ட தெய்வமான காந்திஜி குறித்த அக்கட்டுரையில், "தான் சென்றவிடமெல்லாம் (தமிழ்நாட்டில்) கூடிய மாபெரும் ஜனத்திரளுக்கு இராஜாஜியின் செல்வாக்குத்தான் காரணம் என்று கூறுகின்றார். இதை ஒப்புக்கொள்ளாதிருப்பது வீண் விவாதமென்பது இந்தியாவை உய்விக்கவந்த உத்தமரின் கருத்து. இப்படிக் கூறும்போது காந்திஜி அளவுக்குமீறித் தன்னடக்கத்தைக் காட்டிக்கொள்ளுகின்றார். மகாத்மாவின் அபிப்பிராயத்தின்படி "தென்னாட்டுக் காந்தி"க்கு இத்தகைய சக்தி வாய்ந்த செல்வாக்கு உளதாயின் "சுயநலக்கும்பல்" அவரைக் காங்கிரஸிலிருந்து வெளியேற்றியிருக்க முடியுமா? காந்திஜியின் இக்கூற்று இராஜாஜிக்குப் பொதுஜன செல்வாக்கைப் பெறச்செய்ய முடியாது. காந்திஜியின் ஒளிப்பிளம்பின் பிரதிபிம்பமாக இராஜாஜி மின்னியதை நிரந்தர ஜோதியென நினைந்து மகாத்மா ஏமாறுகின்றார். இது 'மாரீச இலக்கிபம்' போன்றது.

**மகாத்மாவின்** வாக்கைத் தேவ வாக்கெனக் கருதிச் சிரமேற்கொள்ளும் தேசபக்தர்கள் அவர் மனம் நோவதைச் சகிக்க மாட்டார்கள். இத்தகைய பரம்பரையில் உதித்த காமராஜ், மகாத்மா இரு கட்சிகளையும் விசாரியாது தவறான அபிப்பிராயத்தை வெளியிட்டதைக் கண்டு உடனே ராஜிநாமாச் செய்தார். இதனால் நாடார்ஜீ தூய்மையான தேசசேவையின் உச்சத்தைத் தொட்டுவிட்டார்.

இராஜாஜியின் "பாகிஸ்தான் தீர்மானத்திற்குப் பின்னரும், காங்கிரஸிலிருந்து விலகிக் கொண்டு அவர் செய்த வேலைகளினாலும், அவருடைய பேச்சுக்களினாலும் அவர் பொது ஜனங்களின் நம்பிக்கையை இழந்தது உண்மை. இராஜாஜியின் ஒரு சில நண்பர்கள் பத்திரிகைப் பலத்தைக்கொண்டு பொதுமக்களைத் தவறானபாதைகளிற் செலுத்த முயன்றனர். அந்தக் காலத்திற் சென்னையிலிருந்து வெளிவரும் ஒரு மதிப்பான பத்திரிகை 'பெரிய மனிதனும் சின்னப்புத்தியும்' என்றொரு தலையங்கத்தைத் தீட்டி ஸ்ரீ காமராஜ் நாடாரை அவமதித்தது. ராஜாஜி வேண்டும். 'பட்டணம் பறிபோகின்றது' என அலறிப்புடைத்தது அவ்வார வெளியீடு. இதைக் கண்ட சென்னைத் தினசரி ஒன்று 'உண்மை பறிபோகின்றது' என்று வைத்து வாட்டியதுமன்றி அப்பத்திரிகையின் தவறான போக்கையுங் கண்டித்தது. பின்னர் 'பெரியமனிதனும் சின்னப்புத்தியும் என்றெழுதியதைக் குறித்து அவ்வாரப் பத்திரிகை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டது.

**ஆனால்** காந்திஜியின் ஹரிஜன் கட்டுரைக்குப் பிறகு ஸ்ரீ. காமராஜ் ராஜிநாமாச் செய்திருப்பதை ஊன்றிக் கவனிக்கும்போது 'உண்மை பறிபோகின்றது' என அன்று ஒரு பத்திரிகை கூறியது முற்றும் உண்மையென்பது வெளிப்படையாகின்றது. அதே சமயத்தில் அஹிம்ஸா மூர்த்தியான காந்திஜி 'கும்பல்' என்ற பதத்தைப் பிரயோகித்துத் தமது உயர்ந்த ஸ்தானத்திலிருந்து ஒரு படி இறங்கிவிட்டாரா என்று யோசிக்கும்போது உள்ளமே பதறுகின்றது!

— இ. அ.

# நமது வாசிகசாலை

# விசேஷ மலர்கள்

> 'நமது வாசிகசாலையில் விமர்சனத்திற்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதைக்கவனிப்பார்களாக.

**பாரதி:** மாத வெளியீடு. ஆசிரியர்கள்: கே. ராமநாதன், கே. கணேஷ். பிரசுரம். பாரதி காரியாலயம், 'சிஷத்', ரேட்னி பிளேஸ் கொட்டா ரோட், கொழும்பு. ஆண்டுச் சந்தா: ரூ.6. தனிப்பிரதி விலை: சதம் 50

**கதைகள்** மலிந்த இன்றைய தமிழிலக்கியப் போக்கிற்குப் புது வழி காட்டும்" நோக்கத்துடன் பாரதி பரம்பரையில் தோன்றிய இப் புதிய மாசிகை முயற்சிக்குமெனத் தெரிகின்றது. கட்டுரைகளும் கதைகளும் கவிதைகளும் மொழி பெயர்ப்புகளும் இதிற் காணப்படுகின்றன. தீவிர பொதுவுடைமைப் பண்பாட்டிற்தான் இது மூளைகொண்டு உலாவுகின்றது. இலங்கையிலிருந்து வெளிவருவதாயினும் இந்தியரே இதை நடத்துகின்றனர் என்பதைப் 'பாரதி'யைப் படிப்போர் உடனே உணர்வார்கள்.

**வெள்ளித்திரை**— மாதம் ஒரு புத்தகம். பதிப்பாசிரியர்: தா. நாகலிங்கம், காரியாலயம்: திருச்சி ரோடு, கோயமுத்தூர்; உரிமையாளர்; புதுமலர் நிலையம், கோயமுத்தூர். விலை: அணா நான்கு.

**சினிமாக்கலை** சம்பந்தமாக வெளிவரும் சில வெளியீடுகள் வர்ணப்படங்களிலும் 'துக்கடா'க்களிலுமே கவனஞ் செலுத்துகின்கின்றன. இதனால் இவைதேவையற்றதெனக்கூறவில்லை. சினிமா இலக்கியம் பலதுறைகளிலும் வளம்பெற வேண்டுமென்பதே எமது கருத்து. வெள்ளித்திரை என்ற நாமத்துடன் விஜயஞ்செய்துள்ள இப் புத்தகம்

"மண்ணகத்து முன் உணர்ச்சி,
அழகு, கூத்து,
மாசற்ற மணிப்பாட்டு, பேசு
சித்திரம்
கண்களிக்க, கண்ணாடி என்னக்
காட்டி
கள்ளமிலா சேவை செய்யும்..."

எனக் கவி 'கம்பதாசன்' கருதுகின்றார். சினிமாக்கதைகள் எழுதுவதிற் பக்குவம் பெற்ற கி. ரா. அவர்களின் கட்டுரை தமிழ்ப் பட உலகிற்குப் புதியது. இன்னும் 'ரதி', ரா. நா. 'அம்பலவாணன்' 'வியஜன்' ஆகியோர் சினிமா இலக்கியக் கட்டுரைகள் எழுதியிருக்கின்றனர். இயன்ற வரை ஆங்கிலப் பதங்களை நீக்கித் தமிழ்ச் சொற்களைக் கையாளுதல் நன்று. வெள்ளித்திரை புதிய வழியிற் சேவை செய்து வளர்ச்சியுறுமென எதிர் பார்க்கலாம்.

**"சுதந்திர இந்தியா":** பொங்கல் மலர் 1946. ஆசிரியர்: ஈ. ஆர். கோவிந்தன்: [FREE INDIA—Nationalist News Weekly. **Address:** Ammapet Main Road Salem Town. **Annual Sub:** Rs. 9-0-0]

"சுதந்திர இந்தியா"வின்பொங்கல் மலர் அறிவுக்கு விருந்தளிக்கும் நல்ல ஆங்கிலக் கட்டுரைகளுடனும் கதைகளுடனும் அழகாக வெளிவந்திருக்கின்றது. 'காந்தித் தத்துவமும யுத்த பிற்கால அபிவிருத்தித் திட்டமும்' என்பதுபற்றி ஸ்ரீ பாதன் குமரப்பா ஆராய்ந்திருக்கின்றார். சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்குச் சென்னையிலிருந்து விசேஷ பத்திரிகைப் பிரதிநிதியாகச் சென்றிருந்த ஸ்ரீ ஏ. என். சிவராமன் அமெரிக்கப் பத்திரிகைகளைப்பற்றி விளங்கத் தருகின்றார். சினிமா சம்பந்தமான கட்டுரைகளும் துணுக்குகளும படித்து மகிழத் தக்கன.

**அணிகலம்:** பொங்கல் மலர் 1946. ஆசிரியர்: லெ. கதிரேசன் செட்டியார். தெற்கு 2-ம் வீதி, புதுக்கோட்டை, ஆண்டுச் சந்தா: இலங்கை: ரூ. 2—0—0 பொங்கல்மலர் விலை; அணா 12.

**இம்** மலர் அரிய கட்டுரைகளைக் கொண்டு வெளிவந்துள்ளது. அறிஞர் பலர் அவற்றை எழுதி உதவியிருக்கின்றனர். வித்துவான் ஜி. சுப்பிரமணியபிள்ளை 'எளியவாழ்க்கை' என்பது பற்றிச் சிறந்த முறையில் வரைந்துள்ளார். இன்னும் மு. அருணாசலம், பி. கோதண்டராமன முதலியோரின் கட்டுரைகளும் சேர்க்கப் பட்டுள்ளன. கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. இதில் அறிவு வளர்ச்சிக்கான கட்டுரைகளே இருக்கின்றனவென்பது வாசகர்களுக்குப் புலனாகும்.

**இந்தியத்தாய்**— காந்தி மலர். ஆசிரியர்: ஆர். ஆனந்த ராவ். பிரசுரம்: இந்தியத்தாய் காரியாலயம், மதுரை. விலை குறிக்கப்படவில்லை.

**பிரதிவாரமும்** வெளிவரும் இந்தியத்தாய் காந்திஜியின் தமிழ்நாட்டு விஜயத்தை முன்னிட்டு காந்தி மலராகப் பரிணமித்திருக்கின்றது. கட்டுரைகள் கவிதைகள் கதைகள் இதில் அடங்கியுள்ளன. இவற்றுட் பல, வேறு பத்திரிகைகளில் ஏற்கனவே பிரசுரம் பெற்றிருக்கின்றன. மகாத்மாவின் பெயரைச் சொல்லிப் பொழுதுபோக்கலாம். சுமாராக அச்சிடப்பெற்றுள்ளது.

### பின்வந்த நூல்கள்

**மாயசந்யாசி:** ருஷ்ய நாவல் ஆசிரியர்: ஆன்டன் செஹாவ் மொழிபெயர்ப்பு: ரா. ஸ்ரீ. தேசிகன். பிரசுரம்: ஜோதி, நிலையம், திருவல்லிக்கேணி. சென்னை. பக்கம்: 88. விலை: 1-8-0.

**திரிவாசகம்:** ஸ்ரீ அம்பிகையம்மன் அருளியவை. உரை: ஸ்ரீ க. அயோத்திதாஸ் பண்டிதர் பிரசுரம்: ஸ்ரீ சித்தார்த்தா புத்தக சாலை. இலங்கையில்: சாதுநிலையம் 159 காலிரோட், கொள்ளுப்பிட்டி, கொழும்பு. விலை: சதம் 65.

# மன்னனை மீட்போம்!

J. T. ஹென்ஸ்மன்

### தெய்வத்தன்மை, சமாதி.

அத்துவைதம் என்பன ஆன்மாக்கள் மலபந்தத்தினின்று நீங்கி இறுதியில் அடையும் நிலையேயாம். ஒருவனுடைய வாழ்க்கைக்கும் சமயத்துக்கும் இவை ஆதாரமானவை. தெய்வத்தன்மையை அடைய மனிதன் முயல்கின்றான். உலகிலுள்ள எச்சமயம் இதனுண்மையை விளக்குகின்றது? இந்துசமயமொன்றே நமது சாதியினரின் இயற்கை வாழ்க்கைக்கு ஒப்ப இதனை விளக்கிச் செல்கின்றது. இந்து சமயத்துக்கு மலைத்தீபம்போல் இலக்காக நிற்பது அத்துவைதம் என்னும் பெரிய நிலையே. அத்துவைதமே மோட்சமாகும். இதுவன்றி வேறொன்றாயிருக்க முடியாது. மனிதன் தெய்வத் தன்மையை அடைந்தாற்றான் நித்தியத்துவத்தை யடையலாம். கடவுளொருவரே நித்தியவஸ்துவும் ஆநந்தசொரூபியுமாவார். மனிதன் மோட்சத்தை அடைவதென்றால் நித்தியவஸ்தாயும், தெய்வத் தன்மையுடையதாயும் ஆநந்தமாயும் இருப்பதேயாகும். இந்து சமயமொன்றே இவ்வுண்மையை எடுத்துரைத்து ஆன்மா அந்நிலையை அடையச் செய்கின்றது. இதை உண்மையாக விளங்கிக் கொள்பவர் அச்சமயத்தை அங்கீகரித்து மற்றைய போலிக் கொள்கைகளைக் கைவிடவேண்டியதுதான். அப்படிச் செய்யாவிடின் நோக்கிச் செல்லும் இலக்குத் தவறிவிடும்.

**பெண்களும் ஆண்களும்,** இந்த அரிய உயரிய கொள்கைகளையுடைய தமது சமயத்தைக் கைவிடுவதை நோக்குமிடத்து, எவ்வளவு ஆச்சரியமும், துக்கமும் ஏற்படுகின்றது. கல்வி ஞானம் என்னும் சிறந்த மாண்பினையுடைய சிலர் தமது சொந்தச் சமயமாகும் சைவத்தைத் துறந்து பரசமயங்களை நாடுவது எவ்வளவு துக்கமான சம்பவம். சமீபத்தில் விவேகம்படைத்த இரு பெண்கள் அவ்வாறு செய்தனர். கிறீஸ்த வித்தியாசாலைகட்கு அனுப்பப்படும் தமது பிள்ளைகள் சமயமாற்ற மடைவதைக் கண்டும் அவ்விஷயமாக இந்துக்கள் பராமுகமாயிருத்தல் எவ்வளவு வெட்ககரமான விஷயம். இச்சிறுவர்கள் சமயமாற்ற மடைவது ஒருபுறமாக இவர்கள் தாம் இறுதியில் அடையவேண்டிய அரிய நிலையையும் இழந்து விடுகின்றனர். தமது சமயத்தில் சேர்க்குமுன் அப்பிள்ளைகட்கும் அவர்களின் பெற்றோர்க்கும், இந்துசமயத்தில் மோட்சம் கிடையாதென்பதைக் கிறீஸ்த பாதிரிமார் திருப்தியடைய விளக்கவேண்டும். அப்படிச் செய்யாது சைவப்பிள்ளைகளைக் கிறீஸ்த சமயத்திற்கு மாற்ற எவருக்கும் உரிமை கிடையாது. அறிவு முதிர்ச்சியடையாத பாலர்களைச் சமயம் மாற்றும்படி செய்வது எவ்வளவு கொடுமையாகும். கிறீஸ்த பாதிரிமார் ஆங்கிலத்தை நமக்குக் கற்றுக் கொடுத்தது உண்மைதான். ஆனால் அவர்கள் அரிய இலக்கியங்களும் கலைக்ஞானங்களும் எழுதப்பெற்றுள்ள தாய்ப்பாஷையாகும் தமிழை நாம் நன்கு கல்லாது புறக்கணித்துவிடச் செய்தனர். இலக்கியமும் சமயசாஸ்திரங்களும் நிறைந்த தமிழ் சமஸ்கிருதம் என்னும் பொக்கிஷங்களைப் புறத்தே யெறிந்து, சாரமற்ற படிறுகளையே நாம் மேற்கொண்டோம். வாழ்க்கையும் தூய்மையும் நன்னிலைமையிலுள்ள எமது பழைய நிலையை நாம் விரும்பும்போது அதற்கு மாறாக நிற்பவர்கள் இன்னும் அநேகர் உளர். [illegible] கொண்டுவர நாம் விரும்பாதிருப்பதே எல்லாத் தீமைகட்கும் காரணமாகின்றது. ஐயோ! நாம் எமது பெருமையை எவ்வளவு இழந்துள்ளோம். இருடிகள், ஞானிகள், ஆசாரியர்கள், குருதேவர்கள் என்போரின் சந்ததியில் வந்தவர்களை நோக்கிப் பழைய பெரியநிலையைத் தாம் அடைய முயற்சி செய்யுமாறு பாரததேவி விண்ணப்பஞ் செய்கின்றாள். பாரதநாடாகும் இந்தியாவிலுள்ள எமது சகோதரர்கள் அற்புதங்களைச் செய்து வருகின்றனர்; நம் சகோதரிகள் முன்னேறிச் செல்கின்றனர். இன்னுஞ் செய்யவேண்டிய தொண்டுகள் பலவுள. நம்மைப் பீடித்துள்ள மயக்கமாகிய இருள் நீக்கப் படவேண்டும். நன்மையைப் பயக்கும் ஞானமாகும் அறிவு உதிக்கச் செய்யவேண்டும். ஞானமாகும் சூரியனை மறைக்கும் முகிலாகிய இருள் நீக்கப்படவேண்டும். பசியினால் மெலிந்து இறக்கும் உலகமக்கட்கு எங்கள்உதவி இன்றியமையாததாகின்றது.

**இதிலும் பார்க்கச் செய்ய** வேண்டிய தொண்டு வேறுயாது? **போலிக் கிறீஸ்தவர்கள் கையில் அகப்பட்டுப் பரிதவிக்கும்கிறீஸ்து நாதரும் அவர்சீடர்களும் தம்மை மீட்சியடையச் செய்யும்படி எங்களையே நோக்குகின்றனர்.** பழைய சரித்திரத்தில் கூறப்பட்ட சமரித்தனர்களைப்போல நாம் பரிசுத்தமான தொண்டினைப் புரிவோமாக. நமது மக்களை, அவர்களைப் பாதுகாத்து ஓம்பக்கூடிய உண்மையான அறிஞர்கள் கையிற் கொடுப்போமாக.

> ஸ்ரீ ஹென்ஸ்மன் கிறிஸ்த குடும்பத்தில் முழுக்கமுழுக்கப் பிறந்து வளர்ந்தவர். அதிக காலம் சைவக்கல்லூரி ஒன்றின் அதிபராகவு மிருந்தவர். கடந்தவருடம் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சைவ மகாநாட்டிற் பேசும்போது தாம் சைவ அறநெறிகளையே பின்பற்றி வருவதாகக் கூறிச் சைவத்தின் மாண்பினை விளக்கியவர். இவர் விடுத்திருக்கும் விண்ணப்பம் மிஷனரிப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களாக வேலைபார்க்கும் சைவ உபாத்திமாருக்குச் சிறந்த உபதேசமாகவிருக்கின்றது. சம்பளம் பெறுவதற்காக மிஷனரிப் பள்ளிக்கூடங்களிற் புகுந்து சொந்தச் சமயத்துக்குத் துரோகஞ் செய்யும் சில இந்துக்கள் இதை ஊன்றிப்படிப்பார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆபீஸ் பையன்' தரும்:

# எங்கள் காரியாலயம்

எங்கள் ஆபீசில் ஒவ்வொரு கிழமையும் ஏக தடபுடல்தான். எல்லாரும் பேனவும் கையுமாகத்தான் இருப்பார்கள். இவர்கள் எப்படி எழுதித் தள்ளுகிறார்கள் என்பதை நினைக்க நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஏன் நானும் இவர்களைப் போல் எழுதினால் என்ன என்று பலதடவை யோசித்தேன். ஆனால் விளக்குமுன் விட்டிற்பூச்சி சென்றால் எரிந்து சாம்பலாய்ப் போமே! "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்றவாறு நாளாந்தம் எழுதிக்கொண்டு வந்தால் ஓர் எழுத்தாளனாக வந்துவிடலாம். 'கொப்பி' அடித்தோ அல்லது புத்தகங்கள் பத்திரிகை கொஞ்சம் கொஞ்சம் வெட்டிச் சேர்த்தோ கட்டுரைகள் கதைகள் எழுதுவது மிகவும் சுலபம். அவர்கள் எழுத்தாளருமல்ல, நான் ஓர் எழுத்தாளனுமல்ல. இப்பொழுதுதான் பள்ளிக்கூடத்தில் 'ஆனா' படிக்கலாம் என்று யோசித்தேன். ஆனால் எங்கள் ஆசிரியரின் நீலப்பென்சில் ஓர்கை பார்த்துவிடும். எங்கள் பத்திரிகை ஆபீசை நீங்கள் யாரும் பார்த்துவிட்டால் எமதர்ம இராசன் வாழும் இடம் என்றே சொல்லிவிடுவீர்கள். அப்பப்பா! இலேசான இடமா? இருந்தாற்போலிருந்து ஒருவர் வருவார். "ஆசிரியர் எங்கே? நான் அனுப்பிய கட்டுரை ஏன் பிரசுரிக்கவில்லை?" என்று கேட்பார்.

மறுநாளைக்கு, "அன்பார்ந்த ஐயா! தங்கள்மேலான பத்திரிகையில் எனது கட்டுரையைப் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று பல காகிதங்கள் வந்து குவிந்துகொண்டே யிருக்கும். ஓடுகளைக் கிளப்பியெறியுங் கவிதைகளும் 'போஸ்கார்ட்'டில் பொலிந்தவண்ணமிருக்கும். இவைகளைத் தபாற்கந்தோரிலிருந்துகொண்டுவரும் எனக்கும் சிரமந்தான். ஒவ்வொரு கிழமையும் வரும் கட்டுரைகளையும் கதைகளையும் தவறாது பிரசுரிப்பதென்றால் 'பேப்பர்' கட்டுப்பாட்டு அதிகாரியைத்தான் கேட்கவேண்டும். இவர்கள் அனுப்பும் கட்டுரைகளுடன் ஓர் ஆறுசத முத்திரையும் வைத்து அனுப்பினால் அவசரப்படுபவர்களுடைய கட்டுரையைத் திருப்பி அனுப்பிவைப்பார்கள். சனிக்கிழமை வந்துவிட்டால் என்பாடு சொல்லவும் வேண்டுமா? அதிபருக்கு எந்நேரமும் தேனீரும் வெற்றிலையும் கொண்டுவரவேண்டும். துணை ஆசிரியர், அதிபர் ஆதியோர் கூப்பிட்டவுடன் அங்கு ஓடவேண்டும்.

இந்த இந்தத் தந்தியை அடித்துவிட்டுவா என்பார். நான் சைக்கிளை எடுத்துக் கொண்டு பறக்கவேண்டும். கந்தோருக்குப் போனால் அங்குள்ளவர்கள் நேரத்திற்கு விடுவார்களா? மூக்குக் கண்ணாடியை உயர்த்தி மூக்கை, லேஞ்சியால் துடைத்தபடி கொஞ்சம் நில், என்றுவிட்டு "கலோ, ஓ!" என்று 'போனை' எடுத்துத்தங்கள்பாட்டில் அவங்கிவிடுவார்கள். இங்கு திரும்பிவந்தால் இவ்வளவும் என்னசெய்தாய் என்பார் உதவி ஆசிரியர். அப்பால் 'போர்ம'னிடம் புறாவை வாங்கிவா என்பார். ஆனால் 'போர்மனை' அணுகவே முடியாது. 'தடபொட' என்று அதையும் இதையும் எடுத்துக்கொண்டு நிற்பார். புறாவ் வந்துவிட்டது. வெட்டுக்கள் கொத்துகள் நிறைந்த புறாவைக் கொண்டுபோய்க் கொடுப்பேன். போர்மன் தலையைத் தடவிக்கொண்டே, "அங்குகொடு. கெதியாக நடக்கட்டும்" என்பார். படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கும் ஆசிரியர்கள் மறுகணம் பட, பட, என்று படபடத்துக்கொண்டிருப்பார்கள். ஆசிரியரின் 'பெல்' கேட்டவுடன் அங்கு ஓடிப்போவேன்! 'எடிற்றோறி'யலும்கைக்கு வந்துவிடும். 'போம்' கட்டி அடியல் நடந்துகொண்டே இருக்கும். ஆனால் 2-ம் பக்கத்தில் ஒரு கொலம் வெறுமையாகவே யிருக்கும். "அப்பாடா! வெயில் கொளுத்துகிறது" என்று சொல்லிக்கொண்டே வந்து படிக்கட்டில் ஏறுவார் கொண்டோடி. இவருக்கு நாட்டில் நல்ல நடப்பு. எனக்குப் பயம். இவர் ஓர் சாமானிய ஆசாமியல்ல. எட்டுமணிக்கு நான் கொடுக்கும் காப்பியுடன் வெளிக்கிளம்பிச் சரியான நேரத்துக்கெல்லாம் என்னென்னவோ கொண்டுவந்து உள்ளதை உள்ளபடியே உடைத்துத் தள்ளிவிடுவார். தனது ஆசனத்திலமர்ந்திருந்து ஊற்றுப்பேனவைக் கையில் எடுப்பதுதான் தாமதம். அப்புறம்சொல்லவேண்டியதில்லை. பின் யாவும் அடிபட்டுமுடிந்ததும் பேப்பர் மடிப்பு முழுமூச்சாக நடைபெறும். அப்புறம் 'ராப்பர்' ஒட்டும் வேலை. சரி இனிப் பேப்பர் எல்லாவற்றையும் கொண்டு போய்ப் 'போஸ்ட்'பண்ணவேண்டியதுதான்.

அப்பாடா! இனிச் சற்று 'லீவு' என்று பார்த்தால் முடியுமா? ஆசிரியருக்குக் காப்பி, உதவி ஆசிரியர்களுக்கு 'டீ' 'சிகரட்' இத்தியாதி. இந்த அழகில் எங்கள் ஆபீஸை வந்து பார்த்தால் 'ஒரே அமளி துமளி'என்றுதான் சொல்லுவீர்கள். பத்திரிகை உங்கள் எல்லோருக்கும் சொந்தமானதேதான். ஏன்? அவதிப்படுகிறீர்கள் ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்கமாட்டாரா? என்று நான் கூறும்போது என்மீது நீங்கள் ஏன் துள்ளிப் பாயவேண்டும்?


# சண்முகம் ஸ்ரோர்ஸ்

222, ஆஸ்பத்திரி ரேட் : : யாழ்ப்பாணம்

[புறொப்றைட்டர்: ஆ. சண்முகராசா]

★

| | |
|---|---|
| மஞ்சள் காவி | சங்குப்புரி ஆணிகள் (பித்தளை, இரும்பு) |
| சிவப்புக் காவி | சில்லாணிகள் |
| தீந்தை - எல்லாவர்ணமும் | படங்குச் சாக்கு |
| மை - எண்ணெய் | உருண்டைக் கம்பிகள் |
| வார்ணிஷ் | செம்புக் கம்பிகள் |
| கறையான் எண்ணெய் | மண்வெட்டிகள் |
| கல்வனைஸ் வாளிகள் | கோடாலிகள் |
| கம்பி ஆணிகள் | பிக்கான்கள் |
| | சவள்கள் |

★

பித்தளை, இரும்பு (எல்லா அளவுகளிலும்)

பிணைச்சல்கள்

திருங்குகள்

கதவுப்பூட்டுகள்

மற்றும் ஆசாரி வேலைக்குரிய ஆயுதங்கள்

இன்னும் பலவிதமான கட்டடங்களுக்கு வேண்டிய சகல சாமான்களும் தோகைக்கும் சில்லறைக்கும் விலை சகாயமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.


★

SHANMUGAM STORES

[PROPRIETOR: A. SHANMUGARAJAH]

GENERAL HARDWARE MERCHANTS

222, HOSPITAL ROAD : : JAFFNA


## 204-வது இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### அரிசிப் பங்கீட்டுப் புஸ்தகம் இல்லாத குழந்தைகளுக்கு புடவைக் கூப்பன் புஸ்தகம் வழங்கல்

வெளிஊர்கள்:— கொழும்பு தவிர்ந்த ஏனைய வெளிஊர்களில், 1946-ம் ஆண்டு பெப்ரவரி 1-ந் திகதிக்கு முன்னும் 1946-ம் ஆண்டு (April) ஏப்ரல் மாதம் 4-ந் திகதி எடுக்கப்பட்ட குடிசன மதிப்பின் பின்னும் பிறந்த குழந்தைகளாய் அரிசிப் பங்கீட்டுப் புஸ்தகம் இல்லாதவர்களாய் உள்ளவர்கட்கு, பெப்ரவரி மீ புடவைக் கூப்பன் விநியோகம் செய்யும்போது, தலைமைக்காரரால் புடவைக் கூப்பன் கொடுக்கப்படும்.

1946-ம் ஆண்டு பெப்ரவரி 1-ந் திகதிக்குப்பின் பிறந்த குழந்தைகள் மட்டில் குழந்தை பிறந்த அரிசிறைக் கோட்டத்தைச் (Revenue District) சார்ந்த கச்சேரிக்கும், கொழும்பானல் புடவைக் கட்டுப்பாட்டதிகாரி. R. ஹவலொக் ரவுணுக்கும் விண்ணப்பங்கள் செய்யவேண்டும்.

கொழும்பு:— 1945-ம் ஆண்டு ஏப்ரல் 4-ந் திகதி எடுக்கப்பட்ட குடிசன மதிப்புக்குப்பின் பிறந்த குழந்தைகளுக்கு. அரிசிப் புஸ்தகம் இல்லாவிட்டால் பெப்ரவரி மாதம் கூப்பன் விநியோகிக்குந் தருணம், புடவைக் கூப்பன் கொடுபடமாட்டாது. அப்படிப்பட்ட பிள்ளைகட்கு புடவைக் கூப்பனுக்காக விண்ணப்பம் ஹவலொக் ரவுணிலுள்ள கட்டுப்பாட்டதிகாரியின் (R) கிளைக்கு அனுப்பவேண்டும்.

இவ்வகையான எல்லா விண்ணப்பங்களும் கொழும்பானலும் பிற ஊர்களானலும் சரி பிறப்புப் பத்திரத்துடன் கூடியதாக இருக்கவேண்டும். 25 சதம் கொடுத்தால் இதற்கெனச் சித்தம் செய்யப்பட்ட பிறப்புப் பத்திரத்தில் பிறப்புப் பதிவுகாரர் எழுதித் தருவார்.

ஈ. ரொட்ரிக்கோ
புடவைக் கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு 8-2-46 [2642]

# புலவர் வறுமை

சோ. ஆனந்தராஜன்

மழைகாலம். வானத்தில் கருமுகில்கள் சஞ்சரிக்கின்றன. எங்கும் ஒரே இருள். இடையிடையே மின்னலின் வீச்சு. 'சோ' வென்று மழை கொட்டத் தொடங்கிவிட்டது. சோகமுற்ற என் நெஞ்சத்தில் கவலை இடம்பெற்றுவிட்டது. என் மனத்தில் ஒளி தருவதற்கு மின்னலைத் தவிரப் பிறிதொன்றுமில்லை. என்னை அறியாமல் என் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிகிறது. வனாந்திரத்திற் பெய்யும் மழை போல் என் கண்ணீரும் சொட்டுச் சொட்டாய் நிலத்தில் வீழ்ந்து, பிரயோசனமற்றதாய் விட்டது.

மழையும் நின்றபாடில்லை. என் குடிசையில் எங்கு பார்த்தாலும் மழை கொட்டிக்கொண்டே யிருந்தது. மழைத் துளிகள் விழும் இடத்திற் பல பள்ளங்கள் உண்டாகின்றன. விழுந்த துளிகள் நாலா பக்கங்களிலுஞ் சிதறுகின்றன. குடிசையின் நிலமும் நனைந்துவிடுகின்றது. சர்வம்குளிர்மயம். சரீரத்தில் இரத்தஓட்டம் நின்றுவிட்டது போலிருந்தது.

உணவு உட்கொண்டு பல நாளாயின. குழந்தைகளுக்கு இரந்து கொடுக்கும் உணவு போதாததாயிந்தது. என் மனைவி மிகவும் மெலிவுற்றிருந்தாள். பால் வற்றிய அவள் தனங்கள் தோலாந் தன்மையுடன் மடிந்து கிடக்கின்றன. பசியால் வாடும் மைந்தன் முலையில் வாயை வைத்து, பாலில்லாமையாற் கடிக்க, முலையும் வலிப்புற்றது. அவள் கண்களிற் கண்ணீர் பெருகியது. தன் மைந்தனையும் என்னையும் பார்க்கிறாள். அவள் பார்வையில் அவளடையும் துன்பத்தைக் காண்கிறேன். மைந்தனும் அவளைச் சும்மா விடவில்லை. அவளுடைய முகத்தைக் கிள்ளுகிறான். என் செய்வாள் பாவம்! இளமையில், வறுமையென்னும் கொடிய அரக்கன் கையில் அகப்பட்ட பேதை. பிள்ளையின் உபத்திரவமும் குளிரின் உபத்திரவமும் அவளை ஏககாலத்தில் வாட்டுகின்றன.

அவளின் பொன்போன்ற மேனியை, மாசு படிந்த, கிழிபட்ட கந்தையே அலங்கரிக்கிறது. மழைத் துளியுடன் கண்ணீரும் சேர்ந்து நிலத்தை ஈரமாக்குகின்றன. இளமையில் வறுமை கொடிதினுங் கொடிது. அதைச் சகிப்பதே அதனினுங்கொடிது.

அடுப்பங்கரையை அனுபவித்து அதிக காலமாயிற்று. அங்கு இப்போது காளான் பூத்திருக்கிறது. சிலந்திகளும் வலைபின்னி அங்கு சுகமாக வசிக்கின்றன. ஆக எலிகளின் உபத்திரந்தான் இல்லை. இங்கிருப்பதிலே பிரயோசனமில்லை என்பதையறிந்தஎலிகளும்எங்கோ ஓடிச்சென்றுவிட்டன. வௌவால்களின் நடமாட்டம் அதிகம். அவை அடுக்களையையே விடுதியாக்கிக்கொண்டன. சுயேச்சையாக அங்கு வாழ்கின்றன. வீட்டில் வறுமைப் பேய் தாண்டவமாடுகின்றது.

ஒரே வீட்டில் மாமியும் மருகியும் ஒத்திருப்பது அரிது. அதே போலக் கலைமகள் தங்குமிடத்தில் திருமகள் தங்குவதில்லை. புலவர்கள் வறுமையால், வாடி வதங்குவது புதுமையல்ல. வரகவி தாகூர் இதற்குப் புறநடை!

செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே வளர்ந்த ஒருவன் ஏழை படுங் கஷ்டத்தை எப்படி உணர்வான்? ஆனால் இதையறிந்தும் பலர் வாளாவிருக்கின்றனர். இக்கொடுமைக்குத் தமிழ்உலகில்இனி நாங்கள் இடங்கொடுக்கக்கூடாது.

"ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை! ஜாதியில் இழிவுகொண்ட மனிதரென்பதிந்தியாவில் இல்லையே, வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே மனிதர் யாரு மோருநிகர் சமானமாக வாழ்வமே"

என்ற பாரதியாரின்உறுதிமொழி உண்மையாகும் நாள் எந்நாளோ?

புலவனின் கஷ்டத்தைப் பின்வரும் அடிகள் கூறுகின்றன.

"ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பில்
ஆம்பி பூப்பத் தேம்பசி யுழவாப்
பாலின் மையிற்றோலொடுதிரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறழூஉந் தன் மகத்துமுக [நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கண்ணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற் படர்ந் திசினே.........."

—புறநானூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தராசு

•

மயில்வாகனன்

ஒரே படுக்கை; எழும்ப முடியாது; வைத்தியரின் மருந்து தான் அவனுணவு. அவனுக்குத் தாயும் தாய்க்கு அவனும் உதவியாக இருந்தார்கள். சொத்து யாவையும் அப்பன் அப்பவே அழித்துவிட்டான், குடும்பச் செலவுக்குத் திண்டாடும் ரங்கன் பிறருக்கு உதவி செய்கிறதைப் பார்த்தால் யார்தான் பேசமாட்டாகள். அதுவும் கல்லூரியிற் படித்த லக்ஷ்மிக்கு உதவிசெய்ய முற்பட்டுவிட்டால் .........!

ஊரார் பேசுவதும் அவனுக்குத் தெரியும். அன்னை பிச்சையெடுக்கத் தம்பி தானம் வழங்குகிறதைப் போல இருக்கிறதே, என்ன; லக்ஷ்மி, லக்ஷ்மி என்று உயிர் விடுகிறனே. கல்யாணம் செய்யத்தானே என்று பேசுவதைக் கேட்க அவனுக்கு வெட்கமாக இருந்தது. ஆயினும் அவளை அறியாமல் அவனுக்கு அவள்மேல் ஒருபாசம். அன்னையின் கடமைகளை முடித்துவிட்டு லக்ஷ்மியையும் ஒருமுறை பார்த்துவிட்டுத் தான் மறுவேலை.

* * *

ஊரார் பேசுவதைக் கேட்கும் லக்ஷ்மிக்கும் அவனது நடத்தையில் ஐயமுண்டாயது. தன்னையறியாமலே தற்பெருமை அவளிடம் குடிகொண்டது. தன்னுடைய எண்ணப்படியெல்லாம் அவனை ஆட்டலாமென எண்ணினுள். கல்லூரியிற் படிக்கும்போது அவள் அவனிடம் கூறியதை மறந்துவிட்டாள். அவனே அவள் கூறியதைமறக்கவில்லை. லக்ஷ்மியின் சகோதரியும் வெளிப்படையாக லக்ஷ்மிக்குக் கூறினுள். "ஏதோ இங்குமங்கும் அவன் அலைகிருன். ஊரார் அவனைத் தூற்றுகிருர்கள். நீ கல்யாணம் செய்வதாகக் கூறினுற் சொல்லிவிடு. இல்லையேல் முடியாது என்று கூறிவிடு". லக்ஷ்மி ஒன்றும் சொல்லவில்லை. ஆனல் அவன் அவளுக்குச் செய்கின்ற உதவிகளை அவளால் மறக்கமுடியாது.

* * *

ரங்கன் அன்று சாயந்திரம் லக்ஷ்மியின் வீட்டுக்குப் போனுன். லக்ஷ்மியின் அத்தான் அங்கே யில்லை. சகோதரியும் அவளுந்தான். அவனைக் கண்டதும் லக்ஷ்மி உள்ளே போய் விட்டாள். சிறிதுநேரம் நின்று பார்த்தான். அவள் வரவில்லை. ஒருநாளும் அவ்விதம் நடவாமல் அன்று அவ்விதம் நடந்தது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஆனல் லக்ஷ்மியின் சகோதரியோ சந்தோஷமாகப் பேசினுள். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு மணித்தியாலம் வரை நின்று பார்த்துவிட்டு வீடு திரும்பினுன். மறுநாட் காலையும் அங்கே சென்ருன். ஒரே ஏமாற்றம்.........

* * *

ஓடும் இயந்திரத்தைத் திடீரென நிறுத்தமுடியுமா? பின்னேரமும் அதே வீட்டுக்குச் சென்ருன். கதவு பூட்டியிருந்தது. தட்டினுன். சப்தமில்லை. மீண்டுந் தட்டினுன். சப்தமில்லை. திரும்பி ஆறேழடி நடந்தான். மனம் எழவில்லை. கதவண்டை சென்ருன். கதவு மெல்லத் திறந்தது. அத்துடன் ஒருமுகம். 'லக்ஷ்மீ' என்ருன் அவன். அவளிடம் ஏமாற்றம் குடிகொண்டது. அவள் ஒன்றும் பேசவில்லை, 'கதவு பூட்டப்போகிருயா' என்ருன்; அவள் பேசாமல் நின்ருள். அவன் அவளுடைய பேச்சை எதிர்பார்க்கவில்லை. உள்ளே சென்ருன். ஒரு கதிரையை எடுத்துப்போட்டுக்கொண்டிருந்தான். அவளும் வந்து நின்ருள். ஒருவரோடொருவர் சிறிது நேரம் பேசவில்லை. அவளது முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு 'நான் வருகிறேன்' என்ருன். அவள் தலையை அசைத்தாள். 'என்னுடன் பேச மனமில்லையா என்ன?' என்ருன்.

"மனமில்லாமலென்ன" என்ருள் அவள்.

"அப்படியானுல்......"

"ஊரார் கதைப்பது"

"எப்படியும் கதைக்கட்டும். அதற்கென்ன"

"எனக்குவிருப்பமிருக்கவேண்டுமே"

"உனக்கு விருப்பமில்லாவிட்டால்......?"

"நீங்கள் ஏமாந்ததாக முடியுமே"

"எதற்கு நான் ஏமாந்ததாக முடியும்"

"கல்யாணத்துக்கு"

அந்த வார்த்தை அம்பு குத்தியதுபோலிருந்தது.

'அன்ருெருநாள் அந்திநேரத்தில் புத்தகம்வாங்கவில்லை என்று உபாத்தியாயர் உன்னைப் பேசவில்லையா? நீ அழுத முகத்துடன் வீடு திரும்பவில்லையா? நான் ஒரு புத்தகத்தை உன்னிடம் நீட்டி லக்ஷமீ என்னிடம் வேறு புத்தகம் இருக்கிறது நீ இதை வைத்துக்கொள் என்று சொன்னபோது, லக்ஷிமி! நீ என்னைப்பார்த்து 'ரங்கா! நான் தாய் தந்தை யற்றவள் எனக்கு உதவி செய். நான் சத்தியமாக என்னுலாகக் கூடிய உதவியைச் செய்வேன்' என்று கூறவில்லையா? "நான் தாய் தந்தை யற்றவள்" என்ற வார்த்தைகள் என் மனத்திற் பதிந்து விட்டமையாலேதான் நான் உன்னிடம் அன்புகொண்டேனேயன்றி உன்னைக் கல்யாணம் செய்வதற்காகவல்ல. ஊரார் பேசும் இழிந்த வார்த்தையைக் கேட்டும் நான் இங்குவர நீயும் உன் அக்காவும் சேர்ந்து என்னைக் கதவண்டை காக்க வைத்தீர்களே.........

"ஆண்களெல்லாம் பெண்களின் பின்திரிவோரென நீ எண்ணுதல் பிழை. ஆனல் அன்று என்னைக் காப்பாற்றிய அப்பன் இன்று இல்லை. படுக்கையிற் கிடக்கும் அன்னையே என் உதவி. இன்று வறுமைதான். ஆயின் உலகம் ஓர் தராசு, என் பதை நீ விரைவிலறிவாய். லக்ஷ்மி. உன் அன்புக்கு வணக்கம்," என்று கூறிவிட்டுத் திரும்பிப் பாராமல் வெளியேறிவிட்டான்.

* * *

துவிச்சக்கரத்தில் ஓடுபவனை ஒரு கல்லுத் தடைப்படுத்தினுல்...? அதுபோல ரங்கனின் மனமும், மாலையாய் விட்டது. அன்னை தண்ணீர்த் தாகத்தினுல் "ரங்கா...ம்ம்" என்ருள். ரங்கனுற் தலை நிமிர்த்த முடியவில்லை. ஒரே தலையிடி காய்ச்சல். "அம்மா......" என்ருன். அவனது கடைக்கண் வழியே நீரோடிக் கொண்டிருந்தது. ஒரு உதவியுமில்லை. இருவரும் படுக்கையிற் கிடந்தார்கள். கடவுள் கை விடுவாரா? வைத்தியர் வந்தார். ரங்கன் எழும்பவில்லை. விளக்கு ஏற்றப்படவில்லை. 'ரங்கா' என்ருர். அவன் 'ஐயா' என்று மெல்லக் கூறினுன். அவர் மங்கிய வெளிச்சத்தில் அவனருகே சென்று விளக்கை ஏற்றினுர். ரங்கனின் தலையைத் தொட்டுப் பார்த்தார்! கையைப் பிடித்துப் பார்த்தார்; இருவருக்கும் சுடுநீர் வார்த்துக் கொடுத்தார். ஒரு வண்டி பிடித்துக்கொண்டுவந்து தன் வீட்டுக்கு இருவரையும் கொண்டுபோய் விட்டார்.

* * *

இரண்டு வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. ரங்கனுக்கு லக்ஷ்மியின் எண்ணம் அடிக்கடி நினைவுக்கு வரும். ஆனல் அது பெட்டிப் பாம்பு போல அடங்கிவிடும். ரங்கன் இப்பொழுது கமவேலை. கல்லூரிப் படிப்பு அவன் வாழ்க்கைக்கு ஓரளவுக்கே பயன் பட்டது. அவன்மேல் முன்பு ஊரார் கொண்டிருந்த எண்ணமானது மாறிவிட்டது. லக்ஷ்மியின் வீட்டுக்கு ஏன் வருவதில்லை? அவனுக்கு அவளை மணஞ்செய்யும் எண்ணமில்லை என்பார் சிலர், அவன் விரும்பியதை நிறைவேற்றி விட்டபடியால் வருவதில்லை என்பார் சிலர். இதுவும் லக்ஷ்மியின் காதுக்கு எட்டியது. ரங்கனின் ஒவ்வொரு செயலையும் லக்ஷ்மியால் மறக்க முடியவில்லை. அவனைக் காண மிக ஆசை கொண்டாள். கடிதம் எழுதிப் போட்டாள். பதிலில்லை.

* * *

இரண்டொரு நாளின்பின் லக்ஷ்மியின் அத்தான் வைத்தியர் வீட்டுக்கு ஓடினுர். ஊர் முழுவதும் ஒரே பேச்சு. லக்ஷ்மிக்குப் பைத்தியம். ரங்கா ரங்கா என்று கத்துகின்ருள் என்ற கதை.

* * *

"அவளை நீயே காப்பாற்ற வேண்டும். இல்லாவிடில் அவள் வாழ்வு பாழ் அடையும்" என்று சொன்னுர் வைத்தியர் ரங்கனுக்கு. வைத்தியர் பேச்சை அவனுலே தட்ட முடியுமா? பேசாமல் அவர் பின்னே நடந்தான். லக்ஷ்மி வைத்தியர் வீட்டில் இருந்தாள். அவளைப் பார்க்க அவனுல் முடியவில்லை. பைத்தியத்துக்கு அவனே வைத்தியனுனுன். இனியென்ன 'லக்ஷ்மி போகலாமா' என்ருன்.

லக்ஷ்மி ரங்கனை அணைத்துக் கொண்டாள். அன்று அவன் "உலகம் ஒரு தராசு" என்ற வார்த்தைகள் அவளுடைய நினைவுக்கு வந்தன.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

SAMUEL SONS & Co., Ltd.,
HOSPITAL ROAD, JAFFNA
T'GRAM: ECHIRON T'PHONE: 62
Head Office:- 371, OLD MOOR ST.,
COLOMBO

● இரும்பு
கம்பிகள்
கேடர்கள்
சிலாகைகள்
அச்சுகள்
தகடுகள்

○ நீர் இறைக்கும்
யந்திரங்கள்
குழாய்கள்
தாங்கிகள்

○ கல்வனைஸ்
தகடுகள்
தாங்கிகள்
வாளிகள்

● கைத்தொழிற்குரிய
ஆயுதங்கள் மற்றும்
கமத்தொழிற்
கருவிகளும்

● பித்தளை
தகடுகள்
பூட்டுகள்
பிணைச்சல்கள்

○ மைவகைகள்
மை எண்ணெய்
வாணிஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்
ஆஸ்பத்திரி ரோட் : : யாழ்ப்பாணம்
தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62
[2059]

## 201-வது இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### பிரத்தியேக கூப்பன்களின் செல்லுபடி

இதுவரை வழங்கப்பட்டதும் முறையே 5, 10 புள்ளிகளைக் கொண்டதுமான பிரத்தியேக கூப்பன்கள் 1946-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ந் திகதி வரைக்குமே வலுவு உடையனவாகும். அவைகளை அத்திகதிக்குப் பின்னர் கடைகளில் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

2. நடைமுறையில் உள்ள பிரத்தியேக கூப்பன்களிலும் வேறுபட்ட புதிய பிரத்தியேகக் கூப்பன்கள் அச்சு இடப்பட்டுள்ளன. இனிமேல் புதுமாதிரியான பிரத்தியேகக்கூப்பன்களேவழங்கப்படும். இச்சொல்லப்பட்ட கூப்பன்களின் பின்புறத்தில் எம்மால் உரிமையளிக்கப்பட்ட உயர் அலுவலாளர் ஒருவரின் ஒப்பம் இருக்கும். புதிய பிரத்தியேகக் கூப்பன்கள் 1, 5, 10 ஆகிய புள்ளிகளைக் கொண்டன.


3. இறக்குமதியாளர் - சில்லறை வியாபாரிகளாயும், அமெரிக்கன் புடவை வியாபாரிகளாயும் உள்ளவர்கள் உள்ளிட்டு எல்லா மொத்த வியாபாரிகளும் தங்களிடம்உள்ள பழைய மாதிரியான பிரத்தியேகக் கூப்பனகள் எல்லாவற்றையும் புறக்கோட்டை (Pettah)யிலுள்ள கூப்பன் வைப்பகத்தில் (Bank) 1946-ம் ஆண்டு மார்ச்மீ 5-ந் திகதிக்குப் பிந்தாது ஒப்படைக்கவேண்டும்.

4. தெருவில் கூவிவிற்போர், சில்லறை வியாபாரத் தையற்காரர் உள்ளிட்டு சில்லறை வியாபாரிகள் எல்லாரும் 1946-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ந் திகதிக்குப் பிந்தாது இங்கு சொல்லப்பட்ட தங்களிடமுள்ள கூப்பன்கள் முழுவதையும் கூப்பன் வைப்பகத்தில் சேர்க்கவேண்டும். காலவட்டத்தில் அப்படிப்பட்ட சில்லறை வியாபாரிகளுக்கு வேறு கூப்பன்கள் அல்லது அவற்றுக்கு இணையான சான்றேடுகள் அவர்கள் ஒப்படைத்த பிரத்தியேக கூப்பன்களுக்காக வழங்க நடபடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

ஈ. றெட்றிக்கோ
புடவைக் கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு 29-1-46 [2637]

## இந்தியாவில் பஞ்சம் ஏற்பட்டால்?

இந்தியாவில் உணவு நிலைமை சீர்கெட்டுப் போய் எங்கும் பஞ்சம் தாண்டவமாட ஆரம்பித்தால் பிரமாண்டமான புரட்சி ஏற்படும் என்று பண்டித நேரு ஒரு மாபெருங் கூட்டத்தில் நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தில் அரசாங்கத்தாருக்கு ஒரு எச்சரிக்கை விடுத்தார்.




—இதற்குப் பதிலாக வாங்குவதற்கு எவ்வளவு செலவாகுமென யோசித்துப் பாருங்கள்

இப்போது ஆடைகள் விற்கும் விலையில் வண்ணான் ஆடைகளைத் தோய்த்துப் பொத்தல்களை உண்டாக்கவிடுவது, பணத்தை வீண் விரயஞ் செய்ததுபோலாகும். இவ்விதமாக முரட்டுத்தனமாய் நாசமுண்டாக்கக்கூடிய முறையில் ஆடைகளை வெளுக்கவேண்டியதில்லை. சன்லைட் சோப்பினுல் ஆடைகளிலிருந்து மிருதுவாக அழுக்கை நீக்கிவிடலாம். சன்லைட்டில் சுய ஆற்றலுள்ள நுரையிருக்கின்றது. அதனுல் நூலிழைகளைப் பாதிக்காதவாறு அது அழுக்கைத் தூக்கி எடுத்துவிடுகிறது. சன்லைட் முறையில் ஆடைகளை வெளுக்க இன்றே ஆரம்பியுங்கள்; அதனுல் உங்கள் ஆடைகளை நீடித்து நிற்கச் செய்யுங்கள்.

உங்கள் வேலைக்காரனுக்குச் சன்லைட் சோப்பை உபயோகித்துப் பணத்தை மிச்சப்படுத்தும் முறையைக் கற்பியுங்கள்.

1. ஆடைகளைத் தண்ணீரில் நன்ருக ஊற வையுங்கள்.

2. ஆடைகள்மீது—அழுக்குப் படிந்த இடத்தில் மேலதிகமாக — சன்லைட்டை நன்ருகத் தேய்க்கவும்.

3. சோப் ஆடைகளுள் செறியும்படி மிருதுவாகத் தப்புதல்வேண்டும். அவைகளை அடிக்க வேண்டாம். சன்லைட்டின் 'சுய ஆற்றலுள்ள' நுரை அழுக்கை இழக்கி எடுத்துவிடுகிறது.

4. நன்ருக அலசிக் கழுவவும். இப்பொழுது அழுக்கு சன்லைட் நுரையிலேயே இருக்கிறது. ஆனபடியால் எல்லாவற்றையும் அலசிக் கழுவி வெளியேற்றவும். நன்ருக அழுக்கடைந்தஆடைக்கு இன்னெருமுறை சோப் போடவேண்டும்.



சன்லைட் சோப்
உடைகளைப் பாதுகாக்கிறது

LEVER BROTHERS (CEYLON) LIMITED

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest and most Influential Circulation in Ceylon & India

Vol. 16 | Chunnakam, Sunday Feb., 17, 1946 | No. 29

# ஐக்கிய சங்கங்கள் அறிக்கை

## மூவாண்டுப் பெறுபேறு

**புத்தம்புதிய வழிகளையும்** நிர்வாக முறைகளையும் கையாண்டு கடந்த மூன்று வருடங்களும் அற்புதமாகக் கழிந்திருப்பதாக ஐக்கியசங்க அபிவிருத்தித் தலைவர் ஸ்ரீ. ஜி. டீ. சொய்சா தமது மூவாண்டறிக்கை*யிற் கூறுகின்ருர். இருந்த போதிலும் இஃது ஒரு பரிசோதனைக் காலமேயென அவர் தெரிவிக்கும்போது ஐக்கிய இயக்கம் நிலையான கொள்கைகளையும் வெற்றிகரமான திட்டங்களையும் அமைப்பதற்கு இன்னும் அனேக வருடங்கள் இருக்கின்றனவென்பது இக்கூற்றிலே தொனிக்கின்றது.

யுத்தகாலத்தில் நாட்டு மக்களுக்கு ஐக்கியசங்கம் உறுதுணை புரிந்ததென்பதை மறுக்கமுடியாதாயினும் இவ்வியக்கம் கிடைத்த சந்தர்ப்பங்களைச் சீரியமுறையில் உபயோகிக்க வில்லையென்றே கூறவேண்டி யிருக்கின்றது. அரசாங்கத்தின் உதவி பலவகைகளிலும் ஐக்கிய இயக்கத்திற்குக் கிடைத்தவிடத்தும், அவர்கள் மூலதனத்துக்கேற்ற இலாபம் பெறவில்லை. இதனுல் அதிக விலைக்குப் பொருட்களை விற்று இலாபமடையவில்லை யென்ற குறையைச் சுமத்தவில்லை. அதிகமான உத்தியோகஸ்தர்களைச் சங்கக் கடைகளில் நியமித்தும் வியாபாரந் தெரியாதவர்களின் உதவியை நாடியும் வியாபார தந்திரங்கள் தெரிந்த சுயநலப்புலிகளை வேலைக்கு அமர்த்தியும் அநேக ஐக்கியசங்கக் கடைகள் பணத்தை வீணுக இறைத்திருக்கின்றன.

முப்பது இலட்சம் ரூபாய் இலாபம் பெற்றிருப்பது வியக்கத் தக்கதல்ல. இலங்கையின் பல பாகங்களிலும் இன்று 4,000 சங்கக் கடைகள் இருப்பதாக அறிக்கையிற் படிக்கின்ருேம். ஆனுல் இச் சங்கங்கள் அனைத்தும் தளராது தொண்டாற்றுகின்றனவா என்பது சந்தேகமே. இருந்தும் மூன்றுவருடகாலத்தில் ஐக்கிய இயக்கம் 4,000 விற்பனைச் சங்கக்கடைகளை ஏற்படுத்தியிருப்பது போற்றற்பாலது.

1938-ம் ஆண்டு தொடக்கம் 42 வரை வருடமொன்றுக்குச் சராசரி 200 புதிய சங்கங்கள் தோன்றியுள்ளன. 1943-ல் 980 சங்கங்கள் அதிகப்பட்டன. 1944-ல் 2,930 சங்கங்கள், 1945-ல் கடந்தவருடத் தொகையுடன் 480 புதிய சங்கங்கள் கூடிக் கொண்டன. யாழ்ப்பாணத்தில் நொந்துகெட்டுக் கொண்டிருந்த 60 சங்கங்கள் கடந்தமூன்றுவருடகால எல்லையுள் வியக்கத்தக்க முறையில் விருத்தியடைந்திருப்பதாகவுந் தெரிகின்றது.

**யாழ்ப்பாண — மலையாளப்** புகையிலை ஐக்கியவியாபார சங்க சமுதாயம் இலங்கையின் மிகப் பெரிய வியாபார சங்கமாகும். இஃது சதா வலுப்பெற்று வருவதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. 1941-ல் இச்சங்கம் இதன் அங்கத்தினருக்கு 40 சத விகிதம் இலாபப்பணம் அளித்துளது.

வடபகுதியில் 7 விளைபொருள் வியாபாரச் சங்கங்களும், மத்திய பகுதியிலும் அதே தொகையினதும் உள. இத்தகைய இருபது சங்கங்களுள் 5 எவ்வித வேலைகளுஞ் செய்யவில்லை.

இந்நிலையில் "கோஹேதா" என்ற ஒரு குக்கிராமம் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் குறிப்பிடவேண்டும். இது ஒரு கொலைக்களமாக விருந்ததென்றும் இப்போது இங்கு சேமிப்புச் சங்கங்களும் ஐக்கியநாணய சங்கங்களும் நன்ருக வேரூன்றியிருப்பதாகவும் ஸ்ரீ. சொய்சா கூறுகின்ருர். இக்கிராமத்தில் மொத்தம் 500 அங்கத்தினர் உளர். உத்தம குணங்கள் நிறைந்தவர்களே சங்க அங்கத்தினராகலாம் என்ற காரணம்பற்றி இங்குள்ளவர்கள் திருத்தம்பெற்று நற்குண நற்செய்கையுள்ளவர்களாகத் திருந்திவருகின்றனர் எனத் தெரிகின்றது.

தொல்புரம் — மூளாய் ஐக்கிய சங்க வைத்தியசாலை வியக்கத்தக்க முறையில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. பஸ் போக்குவரத்து வசதிகளையும் ஐக்கியசங்கங்கள் சில இடங்களில் நிர்வகிக்கின்றன. வடமராட்சியில் இத்தகையஒழுங்குஏற்பட்டுள்ளது.

இனி ஐக்கிய சங்கங்களின் எதிர்காலத்தைக் கவனிப்போம். யுத்த பிற்காலத் திட்டத்தின்படி இப்போதுள்ள 4000 சங்கங்களும் ஓடி மறைந்தாலும் அவற்றின் சேவையைக் கவனிக்கும்போது ஒருவரும் வருந்தவேண்டியதில்லையெனவும் அவை இல்லாதுபோனுலும் எவ்வித பணநஷ்டத்தையும் எவருக்கும் விளைக்கமாட்டா என்றும், ஐக்கிய சங்க இயக்க அபிவிருத்தித்தலைவர் கூறுகின்ருர்.

இக்கூற்றை ஆராயும்போது ஐக்கியசங்கக் கடைகளின் எதிர்காலம் அவ்வளவு உசிதநிலையில் இருக்கமாட்டாதென்பது நன்ருகப் புலப்படுகின்றது. அரசாங்கம் நல்ல நோக்கத்துடன் செய்த முயற்சிகளைச் சுயநலங் கருதுவோர் தடைசெய்து சங்கங்களின் வளர்ச்சிக்கு இடறுகட்டையாக இருக்கின்றனர். பொறுப்பற்ற இத்தகைய மக்களுக்குச் சில ஐக்கியசங்க உத்தியோகஸ்தர்களின் உதவி இருப்பதால் அவர்கள் தப்பிக்கொள்ளுகின்றனர். இக் குறைகளை அரசாங்கம் நிவிர்த்திசெய்து ஐக்கிய இயக்கத்தை அரண் செய்தல் அவசியம்.

*Administration Report on the working of Co-operative Societies from May 1, 1942, to April 30, 1945 by G. DE SOYZA.




## தொல்காப்பியக் கடவுள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மை; வீரம்; ஆண்மைப் பிழம்பாய ஞாயிற்றினையும், அன்று நந் தமிழ்ப் பெரியோர் வாழ்த்தினர்.

தண்ணிய காதலினை விளக்கப் பெண்கள் பிறைத் திங்களை வணங்கினர். உவா (பௌர்ணமி) நாளைக் கொண்டாடினர். ஞாயிற்றினைப் பொங்கல்நாளில் கொண்டாடினர். இரண்டினையும் இடையறுது நினைந்து தம் வாழ்வின் குறிக்கோளினை முற்றச் செய்தனர். ஆண்களும் பெண்களும் கட்டற்ற, ஈகை வாழ்வினை நடாத்தினர். கடந்துயர்ந்த நாகரிகத்தினை உலகில் விளக்கினர்.

"யாயும் யாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்"

என்னும்போது தமிழ்க் காதலர் சாதி, சமயம், நிறம், நாடு என்னும் கட்டுகட்குட்பட்டா நிற்கின்றனர்?

"தோன்றுவன் மாதோ போர்க் களத் தானே" என்கையில் தமிழ் மகன் வீர வாழ்வு நாட்டின் உரிமைப் போரிலல்லவா அளிக்கப் படுகின்றது?

இங்ஙனம் நாட்டின் இன்பமும் சுதந்திரமும் நிலைக்க ஆண்களும் பெண்களும் தம்மையே அளித்து உள்ளத்தை அச்சமென்னும் கட்டு அற்ற நிலையில் ஆக்கிக் கொண்டனர். ஆண்களும் பெண்களும் பிணைந்ததல்லவா உலகம்! திங்கள் ஞாயிற்ருெளியிலிருந்தும் பிரிந்ததா? ஆதலாற்ருன் அவ்விரு இயற்கைப் போற்றல்களையும் கொடிநிலையாக, வள்ளியாக வைத்து வாழ்த்தினர்?

"சாதலின் இன்னுதது இல்லை இனிது அதூஉம்
ஈதல் இயையாக் கடை" என்பது வள்ளுவர் மறை. சாவு மிகக் கொடியதும் அஞ்சத் தக்கதுந்தான். ஆனுல் உன்னை முழுதும் நாட்டிற்களித்துவிடும் பண்பும் துணிவுங்கொண்ட வாழ்வு வாழ முடியாவிடில் அச்சாவும் துன்பந் தருவதே யென்கிருர். இந்த உள்ளம் அன்று செழித்தது. நாடு வாழத் தன்னைச் சாதலிலும் போரிலும் அளித்தனர் தமிழர். அந்த வண்மை கொண்ட திண்ணிய நெஞ்சு எங்கிருந்து வந்தது? வண்மை யுருவங்களாய கொடிநிலை, வள்ளி வழிபாட்டினுல் என்று கூறுவேன்.

இங்ஙனம் கொடை, அதன் வழி உரிமை, அது விளங்கிய உயர்வு (யாரினுங் கடந்த நாகரிகம்) இவற்றினைப் பெறும் நல்வாழ்வினைக் கூட்டும் குறிக்கோளினைப் பெற்றதன்ருே 'தொல்காப்பியர் கடவுள்' கொள்கை. அந்நிலை இன்று வளர்ந்தால் இன்றைய சமயத்திலுள்ள மாசு நீங்கும்; ஊழல்கள் பறக்கும்; இழிவுகள் அழியும். நாடும் வாழும். இளைஞரும் மக்களும் விழித்தெழுவார்களா? —தமிழ்ப்பொழில்.

## ஓடும் ரயிலில் திருட்டு

பாணந்துறையைச் சேர்ந்த கலுதுங்க ரோட்டில் வசிக்கும் திரு. அல்பேட் பெரேராவின் மகளாகிய செல்வி கே. பெரோரா என்பவர் பாணந்துறையிலிருந்து கோட்டைக்கு சென்ற 12 உ காலை ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தாரென்றும் லுனுவா என்னுமிடத்தில் ஒருவன் திடீரென ரயிலில் ஏறி அப்பெண் [illegible] கொண்டிருந்தபொழுதே பாய்ந்து ஓடிவிட்டானென்றும் தெரிகிறது.

## சாவகச்சேரியிற் படுகொலை

### 'கிறிஸ்' குத்து

**கடந்த வியாழக்கிழமை 14-2-46** சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தையா-சின்னத்தம்பி, (நரையன் சின்னத்தம்பி) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கருகாமையில் தேனீர்க்கடை வைத்திருக்கும் தம்பியையா என்பவரால் 'கிறிஸ்' கத்தியாற் குத்தப்பெற்று மரணமடைந்தார்.

சின்னத்தம்பி என்பவர் தச்சுவேலை செய்பவர். வயது 39 இருக்கும். கட்டுமஸ்தான தேகம். இவர் வியாழன் அன்று மாலை 2-30 மணியளவில் சாவகச்சேரி வாரிவனுதர் சிவன்கோவிற் குளத்துக்கு நீராடச் சென்றபோது சாவகச்சேரி ஸ்ரேசன் தெருவுக் கருகாமையிலிருக்கும் கிணற்றுக் கணித்தாய் நின்ற குறித்த தம்பியையாவைக்கண்டு சேமலாபம் விசாரித்தபோது தம்பியையா 'கிறிஸ்' கத்தியாற் குத்தினதாகத் தெரிகிறது. சின்னத்தம்பி இடது கையால் தடைசெய்துவிட்டுக் கன்னத்தில் அடித்தபோது கத்தி கையை உறுத்கியதாம். தம்பியையா மீண்டும் அவரின் இடது விலாப்பக்கத்திற் குத்தினுர். இதைக்கண்ட சின்னத்தம்பியின் நண்பன் கனகலிங்கம் தம்பியையாவுக்குக் கற்களால் எறிந்தாரென்றும், தம்பியையா கல்லெறிந்தவரின் கையிலும் கத்தியாற் காயம் விளைத்தார் என்றுந் தெரிகிறது.


சின்னத்தம்பி குத்துண்ட செய்தியை அறிந்த சாவகச்சேரிப் பொலீஸார் குறித்த இடஞ் சென்று சின்னத்தம்பியின் வாய்ப் பிறப்பை எடுத்தனர். அவர் தனக்குக் குத்தியவரின் பெயரைத் தெரிவித்துள்ளார்.

பின்னர் ஆஸ்பத்திரிக்குச் சுமந்து செல்லப்பெற்ற சின்னத்தம்பி அதேதினம் மாலை 5-30 மணியளவில் உயிர்துறந்தார். சாவகச்சேரி ஆஸ்பத்திரி டொக்டர் இதுவிஷயத்தைப்பருத்தித்துறையில்வதியும் நீதிபதிக்குத் தெரிவித்தார். நீதிபதி சாவகச்சேரிக்குக் காரில் வந்தபோது ஆஸ்பத்திரி டொக்டர் அங்கு இருக்கவில்லையாம்.

நீதிபதி கனகலிங்கம் என்பவரின் கூற்றைப் பதிந்துவிட்டுச் சென்ருரெனத் தெரிகிறது. வியாழன் இரவு யாழ்ப்பாணப் பொலீஸ்ப்பகுதித் தலைவர் இது சம்பந்தமாகச் சாவகச்சேரிக்கு வந்து திரும்பினுர்.

கொலைசெய்த தம்பியையா எங்கோ மறைவில் இருந்துவிட்டு அடுத்தநாள் பொலிசார்முன் வெளிப்பட்டு இப்போது அரசாங்க அதிதியாக இருக்கின்ருர் எனத் தெரிகிறது. இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மருந்துகலக்கும் சேவகனின் மைத்துனன். —ந-நி

நற்சுகத்திற்கு




எங்களிடம் P. S. R. சந்தனுதித் தைல வகைகளும் விற்பனைக் கிருக்கின்றன.

[2575]

விளம்பரம் இன்றேல் பெரும் பணம் இல்லை.

**யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி**

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை:
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்

(2618)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால், சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 பிப்ரவரி 17உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org